லஞ்ச ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-6 இதழ்-11 ஏப்ரல் -2018 மாதஇதழ் விலை ₹ 10/-

makkalvisaranai@facebook twitter



# யுத்த களமாகும் தமிழகம்



இலவச டோர் டெலிவரி உண்டு
Jeyam
Green Farm Organic
துவக்க விழாவை முன்னிட்டு
15%
தள்ளுபடி
எங்களிடம்
இயற்கையான முறையில்
தயார் செய்த எண்ணெய் வகைகள்
மற்றும் இயற்கையான முறையில்
விளைந்த உணவு தானியங்கள்
அனைத்தும் கிடைக்கும்
PRODUCTS
> Cereals
> Dals
> Flours
> Millets
> Spices
> Spice Powders
> Culinary Pastes
> Masala Mixes
> Oils
> Teas
> Sugar & Jaggery
> Jams & Spreads
> Honey
> Breakfast Cereals
> Cookies
> Juices
> Sparkling Fruit Drinks
> Nut & Dry Fruits
> Health Foods
> Ready to Cook
> Snacks
> Papad
7/13, பொன்மனச் செம்மல் தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
செல் : 93821 33334 / 63819 50149

# தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

## யார் காரணம்?

காவிரி நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பில் கூறியது, உச்ச நீதிமன்றம் சமீபத்திய தீர்ப்பில் தெரிவித்தது ஆகியவை தொடர்பாக கர்நாடகத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் வெவ்வேறான புரிதல்கள் இருக்கின்றன என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.

'நடுவர் மன்றம் குறிப்பிட்டது காவிரி மேலாண்மை வாரியம், காவிரி நதிநீர் ஒழுங்காற்றுக் குழு பற்றித்தான் என்பதால் அவற்றை ஏற்படுத்துவதைத்தான் உச்ச நீதிமன்றம் தனது 'ஸ்கீம்' என்ற வார்த்தையிலும் தெரிவித்தது' என்பது தமிழகத்தின் கருத்து. 'உச்ச நீதிமன்றம் வாரியம் குறித்து எதையுமே சொல்லவில்லை, மத்திய அரசு புதிதாகப் பிரச்சினையைத் தீர்க்கும் அமைப்பை ஏற்படுத்துவது தொடர்பாகத்தான் 'ஸ்கீம்' என்றது' என்பது கர்நாடகத்தின் வாதம். தமிழகத்தின் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்பான மனுவை விசாரணைக்கு ஏற்ற உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ராவும், தங்களுடைய தீர்ப்பில் 'ஸ்கீம்' என்று கூறியது மேலாண்மை வாரியத்தைப் பற்றியல்ல என்று விளக்கம் தந்திருக்கிறார். அதேசமயம் காவிரியில் தமிழ்நாட்டுக்கு உரிய பங்கு கிடைக்காமல் போய்விடாது என்று உறுதிமொழியும் அளித்திருக்கிறார்.

காவிரி நதிநீர்ப் பகிர்வு தொடர்பாக உச்ச நீதிமன்றம் இறுதித் தீர்ப்பு வழங்கி ஆறு வாரங்களுக்குப் பின்னர், மீண்டும் அதே பிரச்சினை உச்ச நீதிமன்றத்திடம் சென்றிருக்கிறது. இது துரதிர்ஷ்டவசமானது. இதற்கு முக்கியக் காரணம் மத்திய அரசின் மெத்தனப் போக்குதான். உச்ச நீதிமன்றம் பிப்ரவரி 16-ல் தீர்ப்பு வழங்கியும் அதை அமல்படுத்தாமல் நீதிமன்றத்தை மத்திய அரசு அவமதித்துவிட்டது என்று தமிழக அரசு வழக்கு தொடுத்திருக்கிறது. இந்நிலையில், மேலும் மூன்று மாதங்கள் அவகாசமும் கேட்டிருக்கிறது மத்திய அரசு. கர்நாடகத்தில் மே 12-ல் சட்ட மன்றத் தேர்தல் நடைபெறும் நிலையில், இப்பிரச்சினையைக் கையிலெடுக்க மத்திய அரசு விரும்பவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

அதுமட்டுமல்லாமல், கூடுதல் அவகாசம் வாங்கிவிடலாம் என்ற நம்பிக்கையில், இத்தீர்ப்பு தொடர்பாக சட்டப்பூர்வமாகச் செய்ய வேண்டிய எதையுமே மத்திய அரசு செய்யவில்லை. தீர்ப்பு வெளியாகி இத்தனை நாட்களுக்குப் பிறகு, உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ள 'ஸ்கீம்' என்பது 2007-ல் நடுவர் மன்றம் தனது இறுதித் தீர்ப்பில் குறிப்பிட்ட மேலாண்மை வாரியம், ஒழுங்காற்று அமைப்பு பற்றியதா அல்லது வேறு ஏதாவதா என்று விளக்கம் வேறு கேட்கிறது மத்திய அரசு.

இந்த ஆறு வார காலத்தில் நிபுணர்களுடன் ஆலோசனை கலந்துவிட்டு நான்கு மாநிலங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவை ஏற்படுத்தித் தண்ணீர் பகிர்வுக்கு ஒரு ஏற்பாட்டைச் செய்து முடித்திருக்கலாம். நேர்மையாகவும் நடுநிலையாகவும் தண்ணீர் எல்லா மாநிலங்களுக்கும் உரிய வகையில் பகிர்ந்தளிக்கப்படுவது முக்கியம். உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு மதிக்கப்படாமல் நிராகரிக்கப்பட மத்திய அரசு துணை போகக் கூடாது. மாறாக அது அமலாவதற்குத் துணை நிற்க வேண்டும்!

\- ஆசிரியர்

மனிதனின் செயல்பாடுகளாலும், பருவ நிலை மாற்றத்தாலும் நிலங்கள் பாலை வனங்களாக மாற்றப்படுகின்றன. மேலும், பூமியின் நிலப்பரப்பும் படிப்படியாகப் பாதிக்கப்படுகிறது. மக்களும் வறுமை நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

சுற்றுச்சூழல் பாதிப்பை முழுவதுமாகத் தடுக்க முயல்வோமானால், பாலைவனமாதல் மற்றும் வறட்சி ஏற்படுவதை நிச்சயம் தடுக்க முடியும். இதைத் தவிர்க்க ஐக்கிய நாடுகள் சபை **1994** ஆம் ஆண்டு தீர்மானம் இயற்றியது. ஜனவரி **30** ஆம் நாள் **1995** ஆம் ஆண்டு முதல், உலக பாலைவன மற்றும் வறட்சி ஒழிப்புத் தினத்தை ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப் படுத்தி, இன்றளவிலும் பின்பற்றி வருகிறது.

இன்றையச் சூழலில், புவி வெப்பமடைதல் என்பது மக்கள் சந்தித்துவரும் பெரும் பிரச்னைகளில் ஒன்று. மீத்தேன், நைட்ரஸ் ஆக்ஸைடு, கரியமில வாயு மற்றும் குளோரோ ஃப்ளோரோ கார்பன் போன்ற வாயுக்களின் வெளியீட்டால் புவி வெப்பமடைந்து வருகிறது. இதனால், கடலோரப் பகுதிகள் கடலில் மூழ்கும் அபாயமும் உள்ளது. மேலும், குடிநீர் ஆதாரங்களான நீர்த் தேக்கங்களும், கால்வாய்களும், ஏரி குளங்களும் நீர் ஆவியாதல் காரணமாக வறண்டு காட்சிய ளிக்கின்றன.

''வறட்சி நிலையை மாற்ற, பராமரிக்கப் படாமல் இருக்கும் நீர் நிலைகளைத் தூர் வார வேண்டும். இதனால், நிலத்தடிநீரின் அளவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சிக்காகத் தொழிற்சாலைகளில் அதிக நீர் வீணாக்கம் செய்யப் படுவதைத் தவிர்க்க வேண்டும். அந்நியச் செலாவணி முக்கியம் என்பதற்காக நீர் ஆதாரத்தை அழிப்பதில் அர்த்தமில்லை. நகர்ப்புறங்களில் பொருளாதாரம் சார்ந்து முக்கியத்துவம் அளிக்காமல் கிராமம் சார்ந்த பொருளாதாரத்தையும் ஊக்குவிக்க வேண்டும். மேலும், காடுகள் அழிப்பைத் தடைசெய்து மரங்கள் வளர்ப்பையும் ஊக்குவிக்க வேண்டும். இதனால் மண்ணரிப்பு தடுக்கப்பட்டு, மழைக் காலங்களில் மரங்கள் வீழ்வதைத் தடுக்கலாம். இவற்றை அரசு எளிய முறையில் நடைமுறைப்படுத்த இயலும்.

தற்போது தமிழகம் சந்திக்கும் வறட்சி கடந்த நூற்றாண்டுகளில் இல்லாத வறட்சி என வானிலை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வறட்சியால் உடனடியாகப் பாதிக்கப்படுவது விவசாயிகளாகும். தமிழகத்தில் அணைகள் எதிலும் இந்த ஆண்டு பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. கீழ்பவானி பாசனத்தை நம்பியுள்ள **2.40** லட்சம் ஏக்கர் நிலம் நீரின்றி வறண்டு போய்விட்டது.

நிலத்தடி நீரை எடுத்துப் பயன்படுத்த விவசாயிகள் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து கோடிக்கணக்கான ரூபாய் நட்டமடைந்துள்ளனர். கிணறுகளிலும், ஆழ்துளைக் கிணறுகளிலும் தண்ணீர் வற்றிவிட்டது.

ஏறக்குறைய ஒரு லட்சம் ஏக்கரில் நெல் விளைச்சல் இந்த ஆண்டு முற்றாக இல்லை. கால்நடைகளுக்குத் தீவனம் இல்லாமல் பரிதவிக்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

வறட்சியில் விவசாயிகள் உடனடியாக பாதிக்கப்படுவதற்கான காரணம், இதற்கு முந்தைய சாகுபடிகளில் அவர்களுக்கு உரிய விலை கிடைக்காததே ஆகும். இதற்கு சிறந்த



# அழியும் விவசாயம்... விழிக்குமா தமிழகம்.?

எடுத்துக்காட்டு கரும்பு விவசாயிகளின் நிலைமை, கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழக அரசு தொலைக்காட்சிகளிலும், செய்தித்தாள் களிலும் பெருமையாக அறிவிக்கும் கொள்முதல் விலையை ஆலைகள் விவசாயிகளுக்கு வழங்கு வதில்லை, இப்பொழுது அரசு அறிவிக்கும் விலை கட்டுபடியாகாது என போராடி வந்த விவசாயிகள், அரசு அறிவிக்கும் விலையை பெற்றுத்தர வேண்டி போராடும் சூழல் ஏற்பட்டுவிட்டது.

ஈரோடு மாவட்டத்தில் காய்ந்து போன வயலைப் பார்த்து கொடுமுடி வட்டத்தைச் சேர்ந்த மஞ்சள் விவசாயிகள் இராமலிங்கம் மற்றும் முத்துசாமி, மொடக்குறிச்சியைச் சேர்ந்த கரும்பு விவசாயி தங்கமுத்து உட்பட 5 விவசாயிகள் இறந்துள்ளனர். இதைப்போலவே திருப்பூர் மாவட்டத்தில் தென்னை விவசாயி சின்னப்பன் மற்றும் தற்கொலை செய்து கொண்ட மரவள்ளிக்கிழங்கு விவசாயி தங்கவேல் ஆகியோர் இறந்துள்ளனர்.

தமிழக அரசு வறட்சி ஆய்வுகளை செய்யும் முன், கடன் சுமையில் தத்தளிக்கும் விவசாயி களுக்கு இத்தொகையை பெற்றுத்தர நடவ டிக்கை எடுக்க வேண்டும். இதற்கு முன்னுதாரண மாக கர்நாடக அரசு இப்பிரச்சனையை முறை யாகக் கையாண்டு வறட்சியால் தத்தளிக்கும் விவசாயிகளுக்கு இத்தொகையை பெற்றுத் தந்துள்ளது.

இவ்வறட்சியில் ஆலைகள் முறையான விலை வழங்காததால், ஆழ்துழாய்க்கிணறு அமைத்து மிகுந்த பொருட்செலவில் கரும்பு பயிரைக் காப்பாற்றும் விவசாயிகளுக்கு விலையை ஏற்றிக் கொடுத்து வெட்ட வியா பாரிகள் முன்வருகிறார்கள். இவ்வாறு பதி வில்லா கரும்பு வெட்டும் முறைக்கும் விவசாயி கள் மாறும் பொழுது, கரும்பு வெட்டும் கூலித் தொழிலாளர்களும் இத்தகைய வியாபாரிகளி டம் வர வேண்டிய சூழல் ஏற்படுகிறது.

வறட்சி நிவாரணம் என்பது ஒரு புறமிருக்க வறட்சிக் காலங்களில் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் தொகை என்பதே முறையாக வழங்கப்படுவதில்லை. பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின் பெயர் மட்டும் விளம்பரத்திற்காக மாற்றப்படுகிறதே தவிர செயல்படுத்தப்படும் முறை ஒன்று தான். விவசாயிகள் பிரீமியம்



தொகை செலுத்துகிறார்கள் அதற்கு ரசீதோ அத்தாட்சியோ வழங்கப்படுவதில்லை. அரசு பிரீமியத்தில் ஒரு பகுதியை ஏற்று, காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்துகிறது. காப்பீட்டு நிறுனத்தை விவசாயிகள் தொடர்பு கொண்டால் உங்களுக்கு தொகை செலுத்தியதற்கான கடிதம் வரும் என்கிறார்கள், ஆனால் விவசாயிகளுக்கு அத்தகைய கடிதம் எதுவும் வருவதில்லை.

இவ்வறட்சியில் பெரும் குடிநீர்த் தட்டுப் பாடு தலைதூக்கி வருகிறது. விவசாயிகளும் பொதுமக்களும் தண்ணீருக்காகப் போராடி வரும் இச்சூழலில் சாயப்பட்டறை அல்லது தோல் தொழிற்சாலை அதிபர்கள் தண்ணீருக்காக போராடுவதில்லை. காரணம் இன்று குடிநீருக்கு மட்டும் உதவக்கூடிய ஆற்றுநீரை இவர்கள் முழுவதுமாக பயன்படுத்தி மாசுபடுத்தி விடுகிறார்கள். இதனால் மக்களுக்கு குடிநீர் என்பதே எட்டாக்கனியாகிவிட்டது.

வறட்சிக் காலங்களிலும் முற்றிலும் பயன் படுத்தப்பட்டு மாசடையும் தண்ணீரை அருந் தும் மக்களுக்கு கொடிய நோய்கள் விரைந்து வந்து சேருகின்றன. அரசு போர்க்கால அடிப் படையில் மக்களின் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். மாவட்ட நிர்வாகம் விவசாய அமைப்பு களுடன் கலந்து பேசி வறட்சி நிவாரணப் பணிகளை முழு மூச்சுடன் செயல்படுத்த வேண்டுகிறோம்.

**- வீ.சிவசங்கர்**

# யுத்த களமாகும் தமிழகம்

ஸ்டெர்லைட் எதிர்ப்பு வலுக்கிறது. தூத்துக்குடி அருகே அ.குமரெட்டியாபுரம் கிராமத்தை தொடர்ந்து, பண்டாரம்பட்டி கிராம மக்கள் தொடர் போராட்டத்தில் குதித்தனர்.

ஸ்டெர்லைட் தொழிற்சாலை, தாமிர உற்பத்தி செய்யும் நிறுவனம் ஆகும். தூத்துக்குடி அருகே சிப்காட் வளாகத்தில் இந்த ஆலை அமைந்திருக்கிறது. இங்கிருந்து வெளியாகும் நச்சு வாயுவால், சுற்று வட்டார கிராமங்கள் பாதிக்கப்படுவதாக இந்த ஆலை தொடங்கப்பட்ட 1996 முதல் எதிர்ப்பு குரல் இருந்து வருகிறது. நீதிமன்ற வழக்குகளையும் எதிர்கொண்டு அந்த ஆலை இயங்கி வருகிறது.

ஸ்டெர்லைட் ஆலை தற்போது ஆண்டுக்கு 4 லட்சம் டன் தாமிரம் உற்பத்தி செய்து வருகிறது. கூடுதலாக மேலும் 4 லட்சம் டன் தாமிரம் உற்பத்திக்காக ஆலையை விரிவாக்க ஸ்டெர்லைட் நிர்வாகம் முடிவு செய்து அதற்கான பணியை மேற்கொண்டது. இதற்கு ஸ்டெர்லைட் ஆலையின் அருகே உள்ள அ.குமரெட்டியாபுரம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

ஸ்டெர்லைட் ஆலையை மூடும் வரை தங்கள் போராட்டம் தொடரும் என அவர்கள் கூறினர். இதேபோல மேலும் சில கிராமங்கள் அடுத்தடுத்து போராட்டத்தில் குதிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

ஸ்டெர்லைட் எதிர்ப்பு வலுப்பெற்று வருவதைத் தொடர்ந்து ஆலை நிர்வாகம் தங்கள் நிலையை விளக்கி நாளிதழ்களுக்கு விளம்பரங்களை அள்ளி இறைக்க ஆரம்பித்திருக்கிறது. 1996-ல் இந்த ஆலை தொடங்கப்பட்டபோது வெடித்த மக்கள் போராட்டத்தை இதேபோல பத்திரிகைகளுக்கு விளம்பரங்களை இறைத்தும், வேறு சில அணுகுமுறைகளிலுமே ஸ்டெர்லைட் நிர்வாகம் மட்டுப்படுத்தியதாக சொல்லப்படுகிறது. இப்போதும் அதே அணுகுமுறையை ஆரம்பித்துவிட்டதாக போராட்டக்காரர்கள் கூறுகின்றனர்.

## நியூட்ரினோ திட்டம் போராட்டம்

சட்டவிரோதமாக நியூட்ரினோ திட்டத்தை தொடங்க நினைத்தால் மக்களைத் திரட்டிப் போராட்டம் நடத்துவோம் என வைகோ எச்சரித்துள்ளார்.

இது குறித்து வைகோ இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ''தேனி மாவட்டம் தேவாரம் அருகில் உள்ள பொட்டிபுரத்தில் அமைய இருந்த நியூட்ரினோ திட்டத்தை எதிர்த்து, அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பெரிய போராட்டங்களை நடத்தி வந்தனர்.

மேற்குத் தொடர்ச்சி மலைகளை யுனெஸ்கோ நிறுவனம், 'பாரம்பரியமிக்க பாதுகாக்கப்பட்ட பல்லுயிரிய மண்டலம்' என்று அறிவித்துள்ளது. மாதவ் காட்கில் மற்றும் கஸ்துரி ரங்கன் குழுவும், உத்தமபாளையம் தாலுகாவை 'பாதுகாக்கப்பட்ட சூழல் மண்டலம்' என்று அறிவித்துள்ளது. அருகில் மதிகெட்டான் சோலை தேசியப் பூங்கா இருப்பதால் 'தேசிய வனவிலங்கு வாரியத்திடம்' அனுமதி வாங்க வேண்டும். இவ்வளவு சூழல் முக்கியத்துவம் சார்ந்த விசயங்கள் உள்ள இடத்தில், பல்வேறு ஆய்வுகளை 'திட்ட முன்னெடுப்பாளர்கள்' செய்து இருக்க வேண்டும்,

ஆனால் ஒரு சாதாரணக் கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி போல, சுற்றுச்சூழல் தாக்கீது அறிக்கை இன்றி, மக்களின் கருத்தைக் கேட்காமல் இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அனுமதி வழங்கி இருந்தார்கள்.

எனவே, நியூட்ரினோ திட்டத்தை எதிர்த்து நான் தொடர்ந்த வழக்கில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் அனுமதி வாங்காமல் திட்டப் பணிகளை நடைமுறைப் படுத்தக்கூடாது என்று சென்னை உயர் நீதி மன்றத்தின் மதுரைக் கிளை தடை விதித்துள்ளது.



இந்த நிலையில் கடந்த மாதம் பிரதமர் தலைமையில் நடைபெற்ற அணுசக்தித் துறையின் ஆய்வுக் கூட்டத்தில், நியூட்ரினோ திட்டத்தை நிறைவேற்றுவதற்காக. இந்திய அரசின் 'தலைமைச் செயலரை' பொறுப்பாக நியமித்து இருப்பதாகச் செய்திகள் வந்தன.

இந்திய அரசியல் அமைப்பு மாநிலங்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளின்படி, ஒரு மாநிலத்தில் எந்த மாதிரியான திட்டத்தை அனுமதிக்கலாம் என முடிவு எடுப்பது, மாநில அரசின் அரசின் உரிமை ஆகும். இதைக் கருத்தில் கொள்ளாமல், மத்திய அரசுத் துறைச் செயலர்களின் கூட்டம் நடைபெற்று அவர்களாகவே முடிவு எடுத்துக் கொண்டு, தமிழக அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றார்கள்.

நியூட்ரினோவுக்கு எதிராக மக்கள் தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்தி வருகின்றார்கள், இந்த நிலையில் மத்திய அரசு மக்களின் உணர்வுகளை மதிக்காமல் திட்டத்திற்கு அனுமதி வழங்கி பணிகளைத் தொடங்கினால், மத்திய அரசுக்கு எதிராக மக்களைத் திரட்டுவோம். போராட்டக் களத்தில் இறங்குவோம். இந்தத் தவறான போக்கைக் கைவிடுமாறு மத்திய அரசை வலியுறுத்துகின்றேன். மத்திய அரசின் அழுத்தத்திற்குப் பணிந்து 'திட்ட நிறுவுதல்' அனுமதியைத் தமிழக அரசு வழங்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கின்றேன் என்று வைகோ தெரிவித்துள்ளார்.

## காவிரி மேலாண்மை அமைக்க போராட்டம்

திருவாரூர் திரு.வி.க. அரசு கல்லூரி மாணவர்கள் 500க்கும் மேற்பட்டோர் வகுப்புகளை புறக்கணித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மற்றும் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத மத்திய அரசைக் கண்டித்து சென்னை நுங்கம்பாக்கத்தில் சாஸ்திரி பவனை முற்றுகையிட்டு போராட்டம் நடத்திய மே 17 இயக்கத்தினரை போலீசார் கைது செய்தனர்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தி சென்னை மெரினாவில் இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளனர். மத்திய அரசுக்கு எதிராக எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி போராட்டம் நடத்தி வருகின்றனர். மேலாண்மை வாரியம் அமைக்காத மத்திய அரசை கண்டித்து இளைஞர்கள் முழக்கம் எழுப்பி போராட்டம் நடத்துகிறார்கள். வாரியம் இல்லையேனில் வரியும் இல்லை என்று போராட்டக்காரர்கள் முழக்கம் எழுப்பினர். பிச்சை கேட்கவில்லை; உரிமையை கேட்கிறோம் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

உச்சநீதிமன்ற உத்தரவுபடி காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படாததை கண்டித்து தமிழகம் முழுவதும் அரசியல் கட்சியினர் உண்ணாவிரதம், ரயில்மறியல், வீடுகளில் கருப்புக்கொடி கட்டி போராட்டம் என பல கட்ட போராட்டங்களை அறிவித்துள்ளனர்.

## விமான நிலையம் விரிவாக்கம் போராட்டம்

சேலம் மாவட்டம், ஓமலூரை அடுத்த காமலாபுரம் சிக்கனம்பட்டி, பொட்டியபுரம், தும்பிபாடி ஆகிய ஊராட்சிக்கு உட்பட்ட இடங்களில் சேலம் விமான நிலையம் அமைந்துள்ளது. இந்நிலையில் சேலம் விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்படும் எனவும், செயல்படாமல் உள்ள சேலம் விமான நிலையம் விரைவில் இயக்கப்படும் எனவும் மத்திய அரசு அறிவித்தது. இதைத்தொடர்ந்து விமான நிலையம் விரிவாக்கத்திற்காக அரசு மற்றும் விவசாய நிலங்கள், வீடு மற்றும் கிணறு ஆகியவற்றின் தற்போதைய நிலவரம் குறித்து வருவாய் துறையினர் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இதற்கிடையே விமான நிலையம் விரிவாக்கப் பணிக்கு தேவையான இடத்தை கையகப்படுத்த வருவாய் துறையினர் அடங்கிய நிலம் கையகப் படுத்தும் குழுவை கடந்த சில நாட்களுக்கு முன்பு சேலம் மாவட்ட ஆட்சியர் ரோகிணி அறிவித்தார்.

சேலத்தில் விமான நிலையம் விரிவாக்க செய்வதற்காக விவசாய நிலம் கையகப்படுத்தும் பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர் போராட்டங்களை முன்னெடுக்க விவசாயிகள் முடிவு செய்துள்ளனர். இதில் விமான நிலைய விரிவாக்க பணியால் பாதிக்கப்படும் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் சார்பில் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு கொடுத்தும். அதன்பின்னர் தமிழக முதல்வரை சந்திந்து இப்பிரச்சினைக்கு தீர்வுகாண விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கின்றனர். இப்பிரச்சனைகள் மேலும் வலுக்குமேயானால் யுத்த களமாகும் தமிழகம்.

**- ஆ. மவுரியன்**



# காவிரிக்கு விடுதலை

கி.பி.1141-ம் ஆண்டு முதலாம் நரசிம்மன் என்ற மன்னன் மைசூரை ஆண்டான். அவன் காவிரில் அணைகட்டி, தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் வராமல் தடுத்தான். அப்போது இரண்டாம் ராஜராஜன் என்ற சோழ மன்னன், மைசூர் மீது படையெடுத்துப் போய், அணையை உடைத்து, "காவிரி"யை விடுவித்தான்.

அதுபோல, 17-ம் நூற்றாண்டில் மைசூரை ஆண்ட சிக்கதேவராயர் என்ற மன்னனும், காவிரித் தண்ணீரை மறித்தான். அப்போது திருச்சியிலிருந்த ராணிமங்கம்மா, காவிரியை மீட்கப் படையுடன் கிளம்பினால். உடனே மன்னன் சிக்கதேவராயர், காவிரியைத் திறந்துவிட்டான்.

இந்தியா விடுதலை அடைந்தபின் மைசூரில் அனுமந்தப்பா என்ற திவான் இருந்தார். இவர் அணைகளை அடைத்து, தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் வராமல் தடுத்தார். அப்போது தலைவர் காமராஜர், "அணைகளை உடனே திறந்துவிடுங்கள்! இல்லையேல், இராணுவ உதவியுடன் அணைகளை திறப்போம்" என்று எச்சரித்தார். உடனே மைசூர் அரசு, அணைகளைத் திறந்து தண்ணீர் விட்டது.




வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

MAKKAL VISARANAI

**மக்கள் விசாரணை**

மக்களின் மனக்குமுறல்

**லஞ்ச ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-6 ஏப்ரல்-2018 இதழ்-11

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் சார்பாக
வெளியிடுபவர் ஆசிரியர்
முனைவர் **ஆ. மவுரியன்,** B.A.,Dip. Journalism,

• ஆசிரியர் குழு
முனைவர் **காசி. அரங்கநாதன், A. காதர் மொய்தீன், V. அருணாச்சலம், A.C. குமார்**

• நிர்வாக ஆசிரியர்
**வீ. சிவசங்கர்,** B.B.A.,

• துணை ஆசிரியர்கள்
**ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார், எஸ். சரவணன், பி. மாரிமுத்து, D. ரவி, M. தரணி, வீரஆறுமுகம், கே.பாலாஜி, அ.மு.ரமணாத்திரி**

• முதன்மை செய்தியாளர்கள்
**S. ராம்குமார்** சேலம் **M. சத்தியராஜ்,** நாமக்கல்.
**A. பாலகிருஷ்ணன், செந்தில்குமார்,** கோவை,
**R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா,** தென்சென்னை
**யு. அக்ரம்கான், சுக்கூர்கான்,** கிருஷ்ணகிரி.
**பா. சுப்பிரமணியன்,** திருநெல்வேலி. **நாகராஜ்,** மூணாறு.
**மாரிமுத்து,** உளுந்தூர்பேட்டை, **சுசீ ஈஸ்வர்,** தென்காசி.
**ராமசுப்பிரமணியன்,** ராஜபாளையம். **சிலம்பரசன்,** தர்மபுரி,
**வெங்கடேசன்** தி.மலை **S. ரமேஷ், அ. சிவராமன்,** காஞ்சிபுரம்.

• நிருபர்கள்
**எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, M.V.சங்கர்ராஜ், ஞானவேல், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின், ஏழுமலை, பிரவின், சத்தியநாராயணமூர்த்தி, சதீஷ்குமார், A.D. ராஜேந்திரன், N.குப்புசாமி**

• சட்ட ஆலோசகர்கள்
**M. குணசீலன்,** B.Com.,M.L.,
**M. சுதாகர்,** B.Sc.,B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை.)

• புகைப்பட நிருபர்கள் :
**M. சந்தோஷ்சிவன், K. மணிவண்ணன்**

• இதழ் வடிவமைப்பு : **AKS Creative's**



அலுவலகம் :

**மக்கள் விசாரணை**

நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி,
ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.
Email : writermouriyan@gmail.com
news@makkalvisaranai.com / www. makkalvisaranai.com
**Cell : 93821 33334 / 63819 50149**



**Press & Registration of Book Act-in** ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

# வாட்ஸ்ஆப்பில் வரும் மூன்று நம்பர் லாட்டரி




## கண்டுகொள்ளாத காவல்துறை...

**தடை செய்யப்பட்ட கேரளா லாட்டரி விற்பனை சேலத்தில் சிறுவணிக கடைகளான டீ கடை, பீடா கடை, பொட்டிக்கடை, சலூன் கடை, ரீசார்ஜ் கடை போன்ற இடங்களில் அமோக விற்பனை நடக்கின்றது.**

அதிர்ஷ்டத்திற்காக சோம்பேறித்தனமாக, உழைக்காமல் குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டு லாட்டரியில் பரிசு கிடைக்கும் என்று பணத்தை விரயமாக்குபவர்கள் நிறைய பேர் உள்ளனர்.

என்றாவது ஒருநாள் விழும் பரிசுக்காக காத்திருக்கின்றனர். ஏழை மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் அட்டைப் பூச்சி லாட்டரி என கூறலாம். அதனால்தான் தமிழக அரசு லாட்டரி விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் சமீப காலமாக கேரள அரசின் லாட்டரி சீட்டு மற்றும் ஆன்லைன் லாட்டரி சீட்டுகள் சட்ட விரோதமாக கொண்டுவந்து விற்பனை செய்கின் றார்கள். இந்த செயலுக்கு பஞ்சமே இல்லை என்பதற்குதான் வேதனையான செய்தி.

கேரள அரசு நடத்தும் லாட்டரி குலுக்கல் தினந்தோறும் நடக்கிறது. முதல் பரிசு ரூபாய் 50 லட்சம் முதல் 8 கோடி வரை பலரையும் சுண்டி இழுக்கும் வகையில் லாட்டரி விற்பனை நடக்கிறது. வாட்ஸ் ஆப் லாட்டரி எனும் மூன்று நம்பர் மற்றும் ஆஃப். ஃபுல் என்று வகைப்படுத்தி விற்பனை நடைபெறுகின்றது.

ஃபுல் என்றால் ரூபாய் 25 ஆயிரம், ஆஃப் என்றால் சுமார் 12,500 ரூபாய் பரிசுச் சீட்டுக்கு வழங்கப்படுகிறது.

சேலம் மாவட்டத்தின் பகுதி வாரியாக அரசியல் முக்கிய புள்ளி துணையோடு லாட்டரி விற்பனையாகிறது.

கேரள வழியாக கோவையிலிருந்து தினந் தோறும் திருப்பூர், உதகை, ஈரோடு ரயில் மூலமாகவும் வாங்கிச் செல்கின்றனர். லாட்டரி சீட்டு விற்பனை செய்வது சட்டப்படிக் குற்றம். இதனடிப்படையில் ஒருசிலரை கைது செய்தாலும் கடுமையாக சட்டம் இல்லாததால் லாட்டரி சீட்டு விற்பனை அமோக தடை இன்றி நடைபெறுகின்றது.

கேரளாவில் அச்சடிக்கப்படும் லாட்டரி சீட்டுகள் கேரளாவில் விற்பனை ஆவதை விட தமிழகத்தில் தான் அதிகம் விற்பனை ஆகிறது.

கேரளாவிலிருந்து கடத்தி வரப்படும் லாட்டரி சீட்டுகள் கோவையில் உள்ள ஏரியா வாரியாக விற்பனை செய்யப்படுகிறது. முன் பின் தெரியாத நபர்கள் லாட்டரி சீட்டுகள் விற்பவர்களிடம் கேட்டால் அவர்களுக்கு லாட்டரி சீட்டுகள் கிடையாது.

பழக்கமானவர்களுக்கு மட்டுமே லாட்டரி சீட்டு விற்பனை செய்யப்படுகிறது. இது தவிர ரகசிய முகவர்கள் மூலம் அலுவல கங்களுக்கும் நேரடியாக வீடுகளுக்கும் கொண்டு சென்று லாட்டரி சீட்டுக்கள் விற்பனை செய்யப்படு கிறது. ரகசிய முகவர்களின் செல்போன் நம்பருக்கு அழைத்தால் உடனடியாக டோர்

டெலிவரி செய்யப்படுகிறது. கேரள அரசு சார்பில் தினமும் லாட்டரி குலுக்கல் நடக்கிறது.

குறிப்பிட்ட வரிசை எண்களில் மொத்த பரிசு தொகையை விட பல மடங்கு விற்பனை இலக்கு நிர்ணயித்து இந்த சீட்டுகள் வெளியிடப்படுகின்றது. உதாரணமாக பி.எம்.எம்.பி. என்று வரிசையில் லாட்டரி சீட்டுக்கள் அச்சடிக்கப்பட்டு இதற்கான அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இதில் போலி சீட்டுகள் அச்சடிக்க எளிதான வழிவகை உள்ளன.




போலி லாட்டரி சீட்டுகள் என்றால் கேரளா அரசு வெளியிடும் லாட்டரி சீட்டு வரிசை மற்றும் எண்ணிலேயே போலி சீட்டுகளும் அச்சடிக்கப்படுகிறது. அந்த போலி சீட்டுகளில் பெரும்பாலனவை தமிழகத்திற்கு அனுப்பப்படுவதால் வெளிவரும் வரிசைலேயே போலி சீட்டுக்கள் இருப்பதால் அவை கேரளாவில் எங்காவது பிடிபட்டால் மோசடி தெரிந்து விடும் என்பதால் போலி சீட்டுக்கள் பெரும்பாலானவை கோவை, திருப்பூர், உதகை, ஈரோடு, நாமக்கல் மற்ற மாவட்டங்களுக்கும் விற்கப்படுகின்றது. இதனால் போலிகளைப் பற்றி கேரளா அரசுக்கு தெரிய வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது.

மேலும் தமிழகத்தில் விற்பனை செய்யப்படும் போலி லாட்டரி சீட்டுகளில் பரிசுகளும் விழுகிறது, அந்த பணமும் தமிழகத்திலேயே கொடுக்கப்படுகிறது. லாட்டரி விற்பனையாளர்களிடமோ லாட்டரி முகவரிடமோ யாராவது ஒருவர் பரிசு பணத்தை கொடுத்து விடுகிறார்கள். பரிசு பணம் வாங்க கேரளா செல்ல வேண்டிய அவசியம் இல்லை, யாரிடம் லாட்டரி சீட்டுகள் வாங்கினார்களோ அவர்களிடமே பரிசுப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இதனால் போலிகள் பற்றி கேரளா அரசுக்கு தெரியாமலேயே போய் விடுகிறது.

கேரளா அரசு லாட்டரி வருமானத்தை பல நலத்திட்டங்களுக்கு செலவிட்டு வருகிறது. அதனால் போலி சீட்டுகள் மூலம் இந்த வருமானம் தனி நபரின் கல்லாப் பெட்டிக்குள் சென்று விடுகிறது. இதுபோன்ற காரணங்களால் தான் தமிழ்நாட்டில் லாட்டரி சீட்டுகளுக்கு தடை விதிக்கப்பட்டது, தற்போது கள்ள மார்க்கெட்டில் விற்கப்படும் கேரளா லாட்டரி யில் பழைய நிலை திரும்பி அப்பாவி ஏழைகள் அன்றாட சம்பாத்தியத்தை இழந்து ஏமாந்து போகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கேரளா அரசு நடத்தும் லாட்டரி சீட்டுகளின் முடிவுகள் தினமும் ஆன்-லைனில் வெளியாகிறது. இதனால் லாட்டரி முடிவுகளை பார்ப்பதற்கு சேலத்திலிருக்கும் முகவர்களின் வாட்ஸ்ஆப்பில் மதியம் *3.30* மணிக்கு Message அனுப்பப்படுகிறது. தொடர்ந்து வாட்ஸ் ஆப் லாட்டரி சீட்டு வாங்கும் பழக்கத்திற்கு தள்ளப்படு கிறார்கள்.

ஒரு ஃபுல்-லின் விலை ரூ.*70*/- ரூபாயும் , ஆப் விலை *40* ரூபாயும் விற்கப்படுகிறது.

ஆன்லைன் சீட்டுகளை பத்து முறை வாங்கினால் அதில் இரண்டு அல்லது மூன்று முறை ஏதாவது ஒரு பரிசு விழுகிறது என்பதனால் சேலம் மக்கள் தொடர்ந்து ஆன்லைன் லாட்டரி சீட்டு வாங்குகின்றனர். எனவே இந்த லாட்டரி சீட்டுகளை தீவிர நடவடிக்கை எடுத்து ஒழிக்காவிட்டால் தமிழகம்முழுவதும் வாட்ஸ் ஆப் லாட்டரி தமிழகம் முழுவதும் விற்பனை பரவிவிடும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே தமிழக அரசு ஏழை மக்களையும், உழைக்கும் வர்க்கத்தினரையும் காப்பாற்ற தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது.

**– ராம்குமார்**



# பத்திரிகையாளர்களை அச்சுறுத்தும் அரசு இயந்திரம்

குற்றச் செயல்களில் ஈடுபட்டால் பத்திரிகையாளர் ஏன் அமைச்சராகக் கூட இருந்தாலும் அவர்களை கைது செய்ய வேண்டும். பத்திரிகையாளர்கள் என்றுமே பத்திரிகையாளர்கள் தான். முன்னாள், இன்னாள் என்று எதுவும் கிடையாது.

குற்றம் செய்யாமல் இருக்கும் புதுப்பிக்காத, தொடர்ந்து வெளிவராத பத்திரிகையாளர்களை வெறும் போலிப் பத்திரிகையாளர் என்ற (பிரிவில்) பெயரில் யாரையும் கைது செய்யக் கூடாது. அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்து அனுப்பி வைக்க வேண்டும். பத்திரிகையாளர் கேட்கும் எந்த தகவலையும் தர அனைத்து தரப்பிற்கும் உத்தரவிட வேண்டும். வெளியாகும் செய்திகளை ஆய்வுக்குட்படுத்தி அதன் மீது நடவடிக்கை உடனடியாக எடுக்க வேண்டும்.

போலி பத்திரிகை என்று குதியே குதி என்று குதிக்கும் கடந்த சில ஆண்டுக்கு முன்பு பத்திரிகை பதிவு செய்தவர்களுக்கும், அரசியல்வாதிகள், ஊழல் வாதிகள், பினாமிக்கள், சாதி சமய ஆதரவோடு தொடங்கப்பட்ட பெரும் நிறுவனங்களில் அதிக சம்பளம் பெறும் ஆகப்பெரிய பத்திரிகையாளர்களுக்கும் வழங்கப்படும் ராஜபோக மரியாதையை குறைத்து அனைத்து பத்திரிகையாளர்களையும் சமமாக மதிக்க வேண்டும். நாமெல்லாம் மனிதர்கள் அவ்வளவே.

சமூகத்தில் முன்பெல்லாம் சாதி சமய, வசதிகளைக் கடந்து பொதுவாக எழுத்தாளர் மற்றும் பத்திரிகையாளர்கள், சமூக செயல்பாட்டாளர்களுக்கு தனி மரியாதை உண்டு. ஆனால் இன்றைக்கோ அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் கையில் அதிகாரம் ஒருங்கே குவிக்கப்பட்டு விட்டதால் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே மரியாதை இருக்கிறது.

இப்போது உள்ள வணிக மயமாக்கலால் ஏற்பட்ட விலைவாசி ஏற்றத்தால் பெரும்



பணக்காரர்கள் மற்றும் அரசாங்கப் பணி மற்றும் ஐ.டி.துறையினர் மட்டுமே மூன்று வேளை சாப்பாட்டுடன் கௌரவமாக வாழும் சூழல் உள்ளது. இந்நிலையில் பத்திரிகைக மற்றும் ஊடகம் நடத்தவது என்பது தற்கொலைக்குச் சமம். காவல்துறை உள்ளிட்ட அனைத்து அரசு சார்ந்த துறையும் லஞ்ச வாவண்யம் ஊறித் திளைக்கின்றன. சலுகை மற்றும் உரிமையை பெற லஞ்சத்தை தர முடியாத மக்கள் அரசு அலுவலக வாசலில் காத்திருந்து தினக்கூலியை யும் இழந்து அல்லப்பட வேண்டியிருக்கிறது.

இதுகுறித்து மனம் நொந்து அவர்கள் கேள்வி கேட்டால் காவல்துறையினர் வந்து அவர்களை அடித்து துரத்துவதும் பணி செய்ய விடாமல் தடுப்பதாக வழக்கு பதிவுசெய்யப் படுகிறது. அதேபோலத்தான் தனியார் நிறுவனங் களை வாடிக்கையாளர் என்கிற முறையில் சாதாரணமாக கேள்வி எழுப்பினால் அடி உதை தான். அப்புறம் கைதுதான். பொதுமக்களை இங்கே வெறும் நுகர்வோராகவே பார்க்கும் அவலமும்; அரசு அதிகாரிகள் பணம் தரும் மிஷின்களாகவே பார்க்கிறார்கள்.

போக்குவரத்து, காவல் உள்ளிட்ட எந்த அரசு அலுவல கத்திலும் லஞ்ச வாங்குவதில்லை என்ற யாராவது மார்த்தட்டிச் செல்லமுடியுமா. அப்படி கொடுக்கமுடியாதவர்கள் அவமானப் படுத்தப்படுவதும் அவர்கள் இந்தச் சட்டத்தின் துணைக்கொண்டே நசுக்கும் வேளையைத்தான் அரசு இயந்திரம் செய்து கொண்டிருக்கிறது.

பல பத்திரிக்கையாளர் சந்திப்புகளில் சமூக நலன் சார்ந்த கேள்விகள் பத்திரிக்கை நண்பர்கள் கேட்காமல் அமைச்சர்கள் கூறும் கருத்துகளை அப்படியே சில காரணங்களுக்காக வெளியிடுகின்றனர் பணம் என்ற உறை சில நேரங்களில் உண்மையை மறைக்கின்றது இதுவும் போலியானவைகளே...

- M.V. சங்கர்ராஜ்


# மக்கள் விசாரணை (மாதஇதழ்)

## சந்தாதாரர் ஆக வேண்டுமா?

கீழ்கண்ட சந்தா படிவத்தை பூர்த்தி செய்து, தேவையான சந்தாவை குறிப்பிட்டுக் கிழே உள்ள விலாசத்துக்கு அனுப்பவும்.

### சந்தா படிவம்

பெயர் : ..........................................

முழு முகவரி : ..........................................

..........................................

தொலைபேசி எண். : ..........................................

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு சந்தா (தமிழ்நாடு) | ரூ. 110/- | ☐ |
| மூன்று ஆண்டு சந்தா (தமிழ்நாடு) | ரூ. 360/- | ☐ |
| ஓர் ஆண்டு சந்தா (வெளிநாடு) | ரூ. 1000/- | ☐ |

**MAKKAL VISARANAI, Current A/C. 149202000000953, IFSC Code IOBA0001492, Indian Overseas Bank, K.K. Nagar Branch** என்ற வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தி ரசீதை ஜெராக்ஸ் அனுப்பினால் போதுமானது.

மேலும் விபரங்களுக்கு

**மக்கள் விசாரணை** (மாத இதழ்)

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.

Email : news@makkalvisaranai.com Cell : 93821 33334 / 63819 50149



# தமிழகத்தின் தண்ணீர்த் தேவைக்கு

## உச்ச நீதிமன்றத்தின் தீர்வு என்ன?

காந்தி சொன்னார், 'தேசத்தின் ஆன்மா கிராமங்களில் இருக்கிறது' என்று. இன்று உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில், தேசத்தின் ஆன்மா நகர்ப்புறங்களில்தான் இருக்கிறது என்பதான தோற்றத்தைத் தனது தீர்ப்பின் மூலம் ஏற்படுத்தியுள்ளது.

ஆளும் வர்க்கங்களும் இந்தப் பின்னணியிலேயே திட்டமிடப்படாத நகர்மயமாக்கலை உருவாக்கிவருகின்றன. 'ஸ்மார்ட் சிட்டி'யில் கவனம் செலுத்தும் அரசு, தேசத்தின் வாழ்வாதாரமாகத் திகழும் விவசாயத்தில் கவனம் செலுத்துவதில்லை. மேலும், நிலத்தடி நீர் மட்டம் விரைவாகக் குறைந்துபோனதற்கு பெங்களூரு போன்ற நகரங்கள் ஏரிகளை, குளங்களை ஆக்கிரமித்து விரிவாக்கம் செய்யப் பட்டதும் ஒரு காரணி.



1 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் குறைந்தால், எவ்வளவு விவசாய உற்பத்தியிழப்பு ஏற்படும் என்பதைக் கணக்கில்கொள்ளாமல் வழங்கப்பட்ட தீர்ப்பு இது. நிலத்தடிநீரைத் தங்கள் நாடுகளில் சேமிக்கும் பொருட்டு, மறைநீர் கொள்கையின் பின்னணியில் கார், மின்னணுச் சாதன உற்பத்தியாளர்கள் இந்தியாவை நோக்கிப் படையெடுக்கின்றனர்.

தீர்ப்பு வழங்குவதற்கு முன்னர் மறைநீர் குறித்த பார்வையையும் உச்ச நீதிமன்றம் உள்வாங்கியிருக்க வேண்டும். மறைநீர் குறித்த புரிதல் உலகம் முழுவதும் உருவாகிவரும் நிலையில், இந்திய ஆளும் வர்க்கங்கள் இதுகுறித்து எந்தப் புரிதலுமின்றி, பன்னாட்டு நிறுவனங்கள் பின்னால் போகின்றன. பன்னாட்டு நிறுவனங்களினூடான இந்திய வளர்ச்சி, மேலும் நிலத்தடிநீரைச் சுரண்டவே செய்யும். 15 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தத் தீர்ப்பு பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்போது, பெங்களூருவின் தேவை இன்னும் கூடுதலாகியிருக்கும். அப்போது உச்ச நீதிமன்றம் என்ன செய்யும்? மீண்டும் தமிழகத்தின் தேவை மீது கைவைக்குமா?

பெங்களூருவின் தண்ணீர்ப் பற்றாக் குறைக்கு தமிழகத்தின் தண்ணீரில் கைவைக்கும் உச்ச நீதிமன்றம், தமிழகத்தின் தண்ணீர்த் தேவைக்கு என்ன தீர்வு வைத்திருக்கிறது?

**- V. அருணாசலம்**



# டே சீரோ நிலையை எட்டும் கேப்டவுன் நகரம்

'டே சீரோ' என்றால் என்னவென்று யோசிக்கின்றீர்களா? உலகிலேயே முதன்முறையாக ஒரு பெரு நகரம் சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல், முற்றிலுமாக தண்ணீரில்லா நிலைக்குப் போகப்போகிறது. இதைத் தான் ஆங்கிலத்தில் "டே சீரோ" (Day Zero) என்று சொல்கிறார்கள். வரும் ஏப்ரல் மாதம் 12-ம் தேதி, கேப்டவுன் நகரம் இந்த நாளை எட்டுகிறது.

சமூக தளங்களில் அவ்வப்போது பரவும் சில தகவல்களை போன்றதொரு நிலை உண்மையில் உருவாகப் போகிறது நம் கண் முன்னே. அதுவும், சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல் போகும் நாளை துல்லியமாக அறிவிக்கப்பட்டு, அதை பதைபதைப்புடன் எதிர்நோக்கியுள்ளனர் கேப்டவுன் மக்கள்.

குறிப்பாக, சமீபத்தில் இந்திய கிரிக்கெட் அணி, தென்னப்பிரிககவுக்கு எதிராக இந்த கேப்டவுன் நகரில் உள்ள மைதானத்தில் விளையாடிய போது, இந்திய வீரர்கள் 2 நிமிடத்திற்கு மேல் குளிக்கக் கூடாது என உத்தரவிடப்பட்டு இருந்தது.

**ஏன் இந்த நிலை?**

கேப்டவுன் நகரில் 4 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். ஒரு காலத்தில் உலகின் பசுமையான நகரில் ஒன்றாக கேப்டவுன் நகரம் இருந்தது. ஆனால், உலக வெப்ப மயமாதல், மழை பெய்யாமை, அரசின் மெத்தன போக்கு, அதைவிட மக்களின் அலட்சியம் ஆகிய காரணங்கள் ஒன்று சேர, இன்று ஒரு சொட்டுத் தண்ணீருக்காக கையேந்த உள்ளது கேப்டவுன் நகரம்.

கேப்டவுனுக்குப் பல காலமாக உயிர் ஆதாரமாக இருந்த தீவாட்டர்ஸ்க்லூஃப்



(Theewaterskloof) அணையின் கொள்ளளவில், கடந்த 2016ம் ஆண்டு 13 சதவிகிதமாக இருந்தது. ஆனால், இப்போது நீர் 10%க்கும் குறைவான நிலையில் வறட்சியை உமிழ்ந்து கொண்டிருக்கிறது. நகருக்கு தண்ணீர் வழங் கும் வாய்ப்பைக் கொண்டிருக்கும் இன்னும் சில அணைகளும் 15% வந்து விட்டன. அது 13.5% எனும் நிலையை எட்டும்போது, "டே சீரோ" நிகழும்.

போடப்பட்டது. மீறினால், அபராதத் தொகை யோடு தண்டனை என்று அறிவிக்கப்பட்டது. பிப்ரவரி 1 முதல் ஒரு நாளைக்கு ஒருவருக்கு 50 லிட்டர் மட்டுமே உபயோகிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

டே சீரோ நிலை ஏற்பட்ட நாள் முதல், நகரின் எந்தக் குழாய்களிலும் தண்ணீர் வராது. அதனால், நகர் முழுக்க 200-க்கும் அதிகமான "தண்ணீர் பெறும் மையங்களை"



அமைத்திருக்கிறது அரசு. வெளியிலிருந்து கொண்டுவரும் தண்ணீரை அதில் நிரப்பு வார்கள். வரிசையில் நின்று பெற்றுக் கொள்ள லாம். ஒரு நாளைக்கு ஒருவருக்கு 25 லிட்டர் மட்டுமே.

கடந்த 2007ம் ஆண்டே, தென்னாப்பிரிக்க நீர் விவகாரங்கள் துறை, நிலத்தடி நீர் குறைந்து வருவது குறித்து எச்சரிக்கை விடுத்தது. இதுகுறித்து மக்களிடமும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், மக்கள் இதனை பெரிதாக கண்டு கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது. அதேசமயம், தக்க நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுக்கவில்லை என்று அரசாங்கத் தின் மீதும் புகார்கள் கடுமையாக எழுகிறது.

**டே சீரோவுக்கு பிறகு கேப்டவுன் மக்களின் நிலை?**

மிக அபாயகரமான நிகழ்வுகள் டே சீரோவுக்கு பிறகு தான் காத்திருகின்றன. கடந்த டிசம்பர் மாதம், ஒரு நாளைக்கு ஒருவர் 87 லிட்டர் தண்ணீரை மட்டுமே உபயோகிக்க வேண்டும் என்று சட்டம்

இதுவும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தான். அதற்குள், பஞ்சம் தீரவில்லை எனில், மக்களிடையே நீருக்காக சண்டை ஏற்படும். பணம், காரை திருடும் முறை மாறி, தண்ணீரை திருடும் சூழல் உருவாகும். அப்போது, காவல் துறை, ராணுவம் கொண்டு அரசு மக்களை ஒடுக்கும். இதனால், கலவரங்கள் உருவாகும். ஒரு நகரத்திற்குள் ஏற்படும் நீர் வறட்சி போர், நாடுகளிடையேயான போராகவும் மாறும்.)

**இதே நிலையை தமிழகமும் சந்திக்க விருக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை**

**- M. தரணி**

# நீர்த்துப்போகும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்

பட்டியல் இனத்தவர் - பழங்குடிகள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்படி வழக்குகள் தொடரப்படுவதற்கு முன்னால் சில நடைமுறைப் பாதுகாப்பு ஏற்பாடுகளை விதிக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது உச்ச நீதிமன்றம். புகார் வருவதனாலேயே ஒருவரைக் கைதுசெய்வது கூடாது.

காவல் அதிகாரி பூர்வாங்கமாக அதைப்பற்றி விசாரித்து புகாரின் தன்மை குறித்து உறுதி செய்துகொள்ள வேண்டும் என்றும் கூறியிருக்கிறது. ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்துவரும் நிலையில், இந்தத் தீர்ப்பு சில கேள்விகளை எழுப்புகிறது.



அரசு ஊழியர்கள் மீது இந்தப் புகார்கள் கூறப்படுமானால், அவர்களுடைய மேலதிகாரிகள் எழுத்துபூர்வமாக அனுமதி அளிக்காத வரையில் கைதுசெய்யக் கூடாது. புகாருக்கு உள்ளானவர் தனியான குடிமக்கள் என்றால், மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் விசாரணை நடத்தி, கைதுசெய்வதற்கு ஒப்புதல் தர வேண்டும் என்கிறது உச்ச நீதிமன்றம்.

தனிப்பட்ட பகைமையைத் தீர்த்துக்கொள்ளவும், எதிராளிகளை அலைக்கழிக்கவும்தான் 'பட்டியல் இனத்தவர் - பழங்குடிகள் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989' அதிகம் பயன்படுத்தப்படுகிறது என்ற கண்ணோட்டத்துக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. 'தவறாகப் பயன்படுத்தப் பார்க்கிறார்கள் என்பதற்காக ஒரு சட்டத்தைத் திருத்தவோ, ரத்துசெய்யவோ வேண்டியதில்லை' என்று ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

இச்சட்டத்தின் விதிகளை மீறியவர்களுக்கு முன் ஜாமீன் தரக்கூடாது என்று சட்டத்தின் 18-வது பிரிவு கூறுகிறது. இந்த உரிமை மறுப்பு, வழக்குக்கு உள்ளான அனைவருக்குமானது அல்ல, குற்றம்சாட்டப்பட்டவர் மீது முதல் நோக்கில் வழக்கு எதுவும் இல்லை என்றால், அவருக்கு முன் ஜாமீன் வழங்கலாம் என்கிறது அமர்வு. உண்மையில், இந்தச் சட்டத்தின் கீழ் புகார்செய்யப்பட்டால் அவை உடனே விசாரணைக்கு ஏற்கப்பட்டு, வழக்கு தொடுக்கப்பட்டு, தீர்ப்புகள் வெளிவருவது மிகமிகக் குறைவு. வழக்குகள் பற்றிய தரவுகளை ஆராய்ந்தாலே இது தெரியவரும்.

இந்தச் சட்டம் 2015-ல் மேலும் திருத்தப்பட்டு கடுமையாக்கப்பட்டது. புதிய வகையான பாரபட்சங்களையும் தாக்குதல் வழிமுறைகளையும் கருத்தில்கொண்டு இப்படிச் செய்யப்பட்டது. இந்தச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவது குறித்து நீதிமன்றங்கள் கவனத்தில் கொள்வது சரியென்றாலும், இப்படிப்பட்ட வழக்குகளில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்படும் கருத்துகள் குறித்து சமூகமும் சட்டமியற்றும் மக்கள் பிரதிநிதிகளும் கவலைப்பட வேண்டும்.

ஒவ்வொரு புகாரும் அக்கறையுடன் பதிவு செய்யப்பட்டு, விரைவாக விசாரிக்கப்பட்டு தீர்ப்புகள் வெளிவந்துவிடும் என்றால், சட்டத்தைப் பற்றியோ, இதர நிர்வாக நடைமுறைகள் குறித்தோ நாம் கவலைப்பட வேண்டியதில்லை. நம்முடைய சமூகம் லட்சிய சமூகமாக இல்லை. எனவே, சமுதாயத்தின் நலிவுற்ற பிரிவு மக்களைக் காப்பாற்றுவதற்காக இயற்றப்பட்ட சட்டங்கள் எந்தக் காரணத்துக்காகவும் வலுவிழக்கப்படச் செய்யக்கூடாது. இந்தக் கவலை சமூகத்துக்கும் நீதிமன்றங்களுக்கும்கூட இருக்க வேண்டும்!

- சத்தியராஜ்



# அதிகரிக்கும் சிசு மரணங்கள்!

குழந்தைகள் பிறந்த ஒரு மாதத்துக்குள் இறந்துவிடும் 'சிசு மரண இறப்பு விகிதம் தொடர்பான புதிய தரவுகள் இந்தியாவுக்கு ஒருபுறம் நம்பிக்கையையும் இன்னொரு புறம் தலைக்குனிவையும் ஏற்படுத்தியிருக்கின்றன. ஐநா சபையின் குழந்தைகள் நல நிதியம் இத்தரவுகளைத் திரட்டியிருக்கிறது. வங்கதேசம், நேபாளம், ருவாண்டா ஆகிய நாடுகளைவிட இந்தியா இதில் பின்தங்கியிருப்பது தலைக் குனிவு. சிசு மரணத்தைக் குறைப்பதற்கு நிதிப் பற்றாக்குறை காரணமல்ல, ஆட்சியாளர்களின் அக்கறையின்மைதான் காரணம்.

'எல்லாக் குழந்தையும் உயிருடன் வாழ' என்ற தலைப்பிலான யூனிசெஃப் அறிக்கைப்படி, பணக்கார நாடுகளுடன் ஒப்பிடும்போது வளரும் நாடுகளில் சிசு மரணம் ஒன்பது மடங்கு அதிகமாக இருக்கிறது. அதேசமயம் சில ஏழை நாடுகள் இதில் வெற்றி கண்டுள்ளன.

இலங்கை, உக்ரைன் போன்ற குறைந்த நடுத்தர வருவாய் நாடுகளில் இந்த சிசு மரண விகிதம் 2016-ல் 5/1,000 என்று குறைந்திருக்கிறது. அமெரிக்காவில் இது 3.7/1,000. நபர்வாரி வருமானம் 1,005 டாலர்களாக இருக்கும் ருவாண்டாவில் 1990-ல் 41/1000 ஆக இருந்த சிசு மரண விகிதம் 2016-ல் 16.5/1,000 ஆகக் குறைந்திருக்கிறது.

ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த இளம் தாய்மார்களை இலக்காக வைத்து அவர்களுக்கு ஊட்டச்சத்து, மருத்துவ வசதிகளை அளித்த தால் இது குறைந்திருக்கிறது. 2016-ல் 25.4/1,00 என்ற சிசு மரண விகிதம் உலக அளவில் 31-வது இடத்துக்கு இந்தியாவைத் தள்ளியிருக்கிறது. 6,40,000 குழந்தைகளை இழந்திருக்கிறோம். இப்பிரச்சினைக்குத் தீர்வுகள் எல்லாமே அதிக நிதிச்செலவை ஏற்படுத்துபவை அல்ல.

சிசு மரணத்தைத் தடுக்க எல்லா மகப்பேறு மருத்துவமனைகளும் 10 முக்கியப் பொருட் களைக் கைவசம் வைத்திருக்க வேண்டும். குழந்தையின் உடல் சில்லிடாமல் இருக்க துணியாலான துண்டு வேண்டும். தாய்ப்பாலைக் குடிக்குமாறு தாயின் மார்பருகில் குழந்தையைக் கிடத்த வேண்டும். கிருமிநாசினிகளும் நோயுயிர் முறி மருந்துகளும் இருந்தால் சீழ்பிடிக்காமலும் மூளைக்காய்ச்சல் தொற்றாமலும் சிசுவைக் காப்பாற்றிவிடலாம்.

தாய்க்கு விழிப்புணர்வையும் ஊட்டச்சத்தை யும் கொடுத்தாலே பாதிப் பிரச்சினை தீர்ந்து விடும். பிரசவத்தின்போது மூச்சுத் திணறல் ஏற்பட்டு சிசுக்கள் மரணிக்கின்றன. இப்படி நேராமல் தடுக்க மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ள மருத்துவமனையில்தான் பிரசவிக்கச் செய்ய வேண்டும். 'ஜனனி சுரக்ஷா யோஜனா' திட்டத்தை உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்கள் தீவிரமாக அமல்படுத்த வேண்டும்.

பொது சுகாதாரம் தாண்டியும் சில அம்சங்கள் இருக்கின்றன. பெண் குழந்தைகளுக் குக் கல்வியறிவு புகட்டப்பட வேண்டும். கல்வி மூலம் கிடைக்கும் விழிப்புணர்வால் சிசு இறப்பு குறைய சில ஆண்டுகள் பிடிக்கும். கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் பொது சுகாதாரத் துறையில் ஏற்படுத்தியுள்ள வசதிகளை எல்லா மாநிலங்களும் செய்து தர வேண்டும். இதனால் சிசு மரணத்தை தேசிய அளவில் 15/1,000 என்று வெகு விரைவில் கொண்டுவந்துவிடலாம். அரசியல் தலைமையும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இதில் நெருங்கி ஒத்துழைக்க வேண்டும்!

**- D. ரவி**

# சிந்தனை முத்துக்கள்




## கில்லாடி....

மனைவி: ஒண்ணுக்கும் உதவாத பொருளை அடுத்தவன் தலையில் கட்டுறதுல எங்கப்பா கில்லாடிங்க...

கணவன்: நான் இதை, நம்ம கல்யாணத்துக்கு அடுத்த நாளே தெரிஞ்சிகிட்டேன்...




## அண்ணே!!! அண்ணே!!!

அண்ணே!!! இந்தியா - துபாய்
வித்தியாசம் ஒன்னு சொல்லுனே!

தம்பி... பாலைவனத்தில்
விவசாயம் பண்ணா அது துபாய்!

விவசாய நிலைத்தை
பாலைவனமா மாத்தினா அது இந்தியா!




## வருமானம்....

ஸ்டெர்லைட் ஆலையை
உடனே மூட முடியாது,
- அமைச்சர் ராஜேந்திர பாலாஜி.

ஒருத்தனுக்கு கார்பரேட் கிட்ட
இருந்து வரவு அதிகமா இருந்தா...
மக்கள் உயிருக்காக போராடினாலும்
இப்படித் தான் பேச தோணும்.

- மக்கள்.




நன்றி தி இந்து

## மாப்பிள்ளை...

ஊட்டி,
கொடைக்கானல்ல
இருக்குற பொண்ணா
பாத்து கல்யாணம்
பண்ணிற
வேண்டியதுதான்.
ஏன்னா..?
வெயில் காலம் வந்தா
மாமியார் வீட்டுக்கு
போய் மாசகணக்குல
தங்கிடலாம்.







போராட்டம் நடத்துவதற்கு தனியாக இடம் இருக்கிறது. தடை செய்யப்பட்ட இடத்தில் போராட்டம் நடத்த வேண்டாம்.

- ஏ.கே.விஸ்வநாதன், சென்னை காவல் ஆணையர்.

அதே மாதிரி தொழில் பண்ண ஆயிரம் இடம் இருக்கு... மக்கள் இருக்குற இடத்துல தான் ஸ்டெர்லைட் கொண்டு வரணுமா...




## உண்மைதான்...

அவன் நிசமாலே
Single தான்.
எப்படி இவ்ளோ
Conform-ஆ சொல்றீங்க?
அவன் போன்ல
வாட்சப்க்கு Lock
போடாம Browser-க்கு
Lock போட்டுருக்கான்...




# எல்லை மீறும் தொழில்நுட்ப கண்கள்?

பேஸ்புக் பயன்படுத்துபவர்களில் மூன்றாம் நபர் செயலிகளை ஒரு முறையாவது பயன்படுத்தாதவர்கள் மிக சொற்பமே. உங்களது சிறந்த ஃபேஸ்புக் நண்பர் யார், உங்களுக்கு அதிக லைக் போட்டது யார், நீங்கள் அதிகமாக ஃபேஸ்புக் சாட்டில் பயன்படுத்திய வார்த்தை போன்றவற்றைக் கண்டறிந்து சொல்வதற்கு பல விதமான மூன்றாம் நபர் செயலிகள் ஃபேஸ்புக்கில் கிடைக்கின்றன.

செயலிகளை உருவாக்குவதற்கான தொழில் நுட்பம் தெரிந்த எவரும் ஃபேஸ்புக் டெவலப்பர் வசதியில் இணைந்து இந்த செயலிகளை உருவாக்கலாம். இவை ஃபேஸ்புக்கின் அனுமதியோடு செயல்படுகிறவை.

லண்டனைச் சேர்ந்த கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா என்ற தகவல் திரட்டு நிறுவனம் இந்த முறையில் ஃபேஸ்புக்கிலிருந்து தகவல்களைத் திரட்டி பல நாடுகளின் தேர்தல் முடிவுகளையே மாற்றி அமைத்திருக்கிறது. அலெக்சாண்டர் கோகன் என்பவர் ஃபேஸ்புக்கில் 'திஸ் ஈஸ் யுவர் டிஜிட்டல் லைஃப்' என்ற பெயரில் ஒரு மூன்றாம் நபர் செயலியை உருவாக்கி அதன் மூலம் 5 கோடி அமெரிக்க மக்களின் தகவல்களை ஃபேஸ்புக் வரைமுறைகளுக்கு உட்பட்டு கைப்பற்றியிருக்கிறார்.

இவற்றை கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா நிறுவனத்துக்கு கைமாற்றியிருக்கிறார். இந்த நிறுவனம், கிடைத்த தகவல்களைப் பயன்படுத்தி மக்களின் மனதை மாற்றும் வகையில் பொய் செய்திகளை உருவாக்குதல், தலைவர்களைப் பற்றிய தவறான தகவல்களை வெளியிடுதல், அந்தரங்க தகவல்களைத் திரட்டி பிரபலமானவர்களை மிரட்டுதல், பாலியல் ரீதியாக ஆசை காட்டுதல் என பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி தேர்தல் முடிவுகளையே மாற்றி அமைத்துள்ளது.

மிகவும் அலட்சியமாகவும் பொறுப்பின்மையுடனும் இந்த விவகாரத்தை ஃபேஸ்புக் கையாண்டிருக்கிறது. 2013-ம் ஆண்டே அமெரிக்க மக்களின் தகவல்களை தனது செயலி வழியாக அலெக்சாண்டர் கோகன் கைப்பற்றிவிட்டார். இந்தத் தகவல்களை கேம்பிரிட்ஜ் அனலிட்டிகாவுக்கு கோகன் கைமாற்றிய விஷயம் 2015-ம் ஆண்டு ஃபேஸ்புக் நிர்வாகத்துக்கு தெரியவருகிறது.

இதற்கு எதிராக ஃபேஸ்புக் எடுத்த நடவடிக்கை கேலிக்கூத்தாக இருப்பதோடு அதன்மீதான நம்பகத்தன்மையை ஒட்டு மொத்தமாக இழக்கச் செய்கிறது. கேம்பிரிட்ஜ் அனலிட்டிகாவும் கோகனும் தகவல்களை நிரந்தரமாக அழித்துவிட வேண்டுமென ஃபேஸ்புக் கேட்டுக்கொண்டது. அதற்கு தகவல்களை அழித்துவிட்டதாக கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா தொழில்முறையில் அல்லாமல் மிகச் சாதாரணமாக பதிலளித்துள்ளது.

ஃபேஸ்புக் போன்ற பெரிய அளவில் மக்கள் தரவுகளை வைத்திருக்கும் ஒரு நிறுவனம் இந்த பதிலை எப்படி ஏற்றுக்கொண்டது? இந்த சிக்கல் இப்போது பொதுவெளிக்கு வந்ததும் கேம்பிரிட்ஜ் அனலிட்டிகாவிடம் உள்ள தகவல்களை ஆராய்வோம் எனச் சொல்லும் ஃபேஸ்புக், 2015-ம் ஆண்டே ஏன் இந்த நடவடிக்கையை எடுக்கவில்லை?




இந்தப் பிரச்சினையில் கவனிக்கவேண்டிய இன்னொரு விஷயம் கோகனிடம் சென்று சேர்ந்த தகவல்கள் பயனரின் அனுமதியின்றி பெறப்பட்டவையல்ல. கோகனின் செயலியில் உள்நுழைவதற்கு முன் எந்தெந்த தகவல்கள் கைப்பற்றப்படும் என்பது தெரிவிக்கப்பட்டு பயனர்கள் அதை ஒப்புக்கொண்டபின்புதான் தகவல்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

ஃபேஸ்புக்கை குற்றஞ்சாட்டும் அதே வேளையில் பயனர்களின் கவனக்குறைவையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். எனது தகவல்களைப் பகிர்வதால் எனக்கு எந்த சிக்கலும் கிடையாது என்று ஒருவர் சொல்லலாமென்றாலும் கூட ஒட்டு மொத்த சமுதாயத்தின் சிந்தனையை, அரசியல் அதிகாரத்தை தவறான வகைகளில் மாற்றி அமைப்பதில் ஒவ்வொருவருடைய சிறு தகவல்கள் ஒன்றிணைந்து ஆற்றும் பெரும் பங்களிப்பை துச்சமென நினைக்கமுடியாது.

**- K. பாலாஜி**


## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

# மக்கள் விசாரணை

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. **Email : news@makkalvisaranai.com**
**Cell : 93821 33334, 93821 44446**



# உச்ச நீதிமன்றத்தில் ஆதார்

உலகத்தின் ஒட்டுமொத்த சக்தியையும் பயன்படுத்தினால்தான் ஆதார் தகவல்களை திருட முடியும் என்று உச்ச நீதிமன்றத்தில் ஆதார் சிஇஓ அஜய் பூஷன் பாண்டே தெரிவித்தார். ஆதார் தொடர்பான வழக்கை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையில் 5 பேர் கொண்ட அரசியல் சாசன அமர்வு விசாரித்தது.

இந்த வழக்கை விசாரித்தபோது, மத்திய அரசின் அட்டார்னி ஜெனரல் வேணுகோபால் வாதிடுகையில், 'ஆதார் தகவல் பாதுகாப்பு, கண்காணிப்பு தொடர்பான பல்வேறு தொழில்நுட்ப ரீதியான கேள்விகளுக்கு ஆதார் சிஇஓ பதில் அளிக்க நீதிமன்றம் அனுமதி அளிக்க வேண்டும்' என்று கோரிக்கை வைத்தார். இதை உச்ச நீதிமன்ற அமர்வு ஏற்றுக்கொண்டது.

ஆதார் சிஇஓ அஜய் பூஷன் பாண்டே உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகி பல்வேறு தொழில்நுட்ப விவரங்கள் குறித்து விளக்கம் அளித்தார். அப்போது, இரண்டு எல்இடி திரை மற்றும் புரஜெக்டர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டன. அவற்றில் ஒன்று பழுதானது. இதையடுத்து, மற்ற ஒன்றின் மூலம் நீதிபதிகளின் சந்தேகங்களுக்கு அவர் விளக்கம் அளித்தார். அதன் விவரம் வருமாறு:

ஆதார் வந்த பிறகு மக்களுக்கான மானியம் மற்றும் சேவைகள் திறம்பட வழங்கப்பட்டு வருகின்றன. ஆதார் எண் பெறுவது ரேஷன் கார்டு பெறுவது போல் கடினமல்ல. ஆதார் தகவல்களை எல்லாம் ஒரே நாளில் திருடி விட முடியாது. ஆதார் தகவல்கள் யாருக்கும் வழங்கப்படுவது கிடையாது.

ஆதார் தகவல்கள் வழக்கமாக மத்திய நிதியமைச்சகத்தில் பயன்படுத்தப்படும் பாது காப்பை விட 8 மடங்கு அதிக பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. ஒட்டு மொத்த உலக சக்தியையும் பயன்படுத்தினால்தான் இதன் ரகசிய குறியீடுகளை உடைத்து தகவல்களை திருட முடியும். தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களால் கூட அதை திருட முடியாது. ஏனெனில், இது நமது சாப்ட்வேர். இதை நாம் மேம்படுத்தலாம். இவ்வாறு அவர் கூறினார்.

அதன்பின் நீதிபதிகள் கேட்ட கேள்விக்கு அவர் பதில் அளித்தார். அதன் விவரம் வருமாறு:

**நீதிபதி சிக்ரி:** 6.89 லட்சம் ஆதார் தகவல்களை பதிவு செய்த 49 ஆயிரம் தனியார் நிறுவனங்களின் உரிமையை ரத்து செய்தது ஏன்?

**பதில் :** லஞ்சம் வாங்கியது அல்லது குறைந்த தரத்தில் தகவல்களை சேகரித்த காரணத்தினால் அவர்கள் நீக்கப்பட்டு இருக் கலாம். ஏனெனில், தரம் விஷயத்தில் நாங்கள் சமரசம் செய்து கொள்வது கிடையாது. ஏனெனில், பயோமெட்ரிக் தகவல்கள்



மாறினால் அவர்களுக்கான அனைத்து சேவைகளும் நிறுத்தப்படும். அவர்களிடம் மீண்டும் பயோமெட்ரிக் தகவல்கள் சேகரிக்கப்படும்.

**நீதிபதி சந்திரசூட்:** தகவல்கள் சரியாக இல்லாமல் போனால் ஒரு நபரின் சேவை பாதிக்கப்படும் என்கிறீர்கள். அப்படி என்றால் அது அவருக்கு தெரியாமல் போனால் அது பெரிய இழப்பு அல்லவா?. எத்தனை பேருக்கு சேவைகள் மறுக்கப்பட்டு இருக்கின்றன?. அது பற்றிய தகவல் எதுவும் உண்டா?

**பதில்:** ஆதார் தகவல்கள் இல்லாவிட்டாலும் யாருக்கும் எந்தவித சேவையும் நிறுத்தப் படக் கூடாது என்று உத்தரவிடப்பட்டு இருக்கிறது. மேலும், தகவல் சரியாக இல்லாதவர்களுக்கு சரி செய்யவும், அவர்களின் அங்கீகாரம் பெறவும் ஒருமுறை கடவுச்சொல் (ஓடிபி) போன்ற பல வழிமுறைகள் உள்ளன.

வங்கிகள், தபால் நிலையங்கள், பதிவு மையங்கள் தவிர ஆதார் பதிவு சிறைச்சாலையிலும் மேற்கொள்ளப்படுகிறது. எனவே, தவறு நடக்க வாய்ப்பே இல்லை. தினமும் 4 கோடி தகவல்களை சேகரிக்கிறோம். ஆனால், யாருக்கும் இதற்கான நோக்கம் தெரியாது.

இவ்வாறு வாதம் நடந்தது. ஆனாலும், ஆதார் சிஇஓ பதிலில் நீதிபதிகள் திருப்தி அடையவில்லை. இதையடுத்து மார்ச் 27ல் மீண்டும் அவரை ஆஜராகி விளக்கமளிக்க நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

- சத்தியநாராயணமூர்த்தி

## மாணவர்களின் கண் பார்வை திறனை பாதிக்கும் கரும்பலகையில் 3 செ.மீ.க்கு குறைந்த அளவில் எழுதக்கூடாது

மாணவர்களின் கண் பார்வை திறனை பாதிக்கும் என்பதால் கரும்பலகையில் 3 செ.மீ.க்கு குறையாத அளவில் எழுத வேண்டும் என்று ஆசிரியர்களுக்கு பள்ளி கல்வி இயக்குநர் உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் பள்ளி கல்வித்துறையின் கீழ் இயங்கும் அனைத்து வகை பள்ளிகளிலும் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை நடைமுறைப் படுத்துவது மட்டுமின்றி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களின் உடல் நலனை கருத்தில் கொண்டு அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கண் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளையின் அறிவுரைப்படி மாணவர்களின் கண் நலனை பாதுகாத்திடும் வகையில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பள்ளி கல்வி இயக்குநர் அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். அதன் விபரம் வருமாறு:

ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறையில் கரும்பலகையில் எழுதும்போது எழுத்தின் அளவு 3 முதல் 4 சென்டி மீட்டர் அளவில் அல்லது அதற்கு மேல் இருப்பது அவசியம். அவ்வாறு இருந்தால் குழந்தைகள் வகுப்பறையின் எந்த இடத்தில் அமர்ந்திருந்தாலும் அது அவர்களின் பார்வை சார்ந்த சிரமங்களை குறைக்கும்.

மேலும் கரும்பலகையின் ஓரங்களில் எழுத்து அளவு குறியீடு (ஸ்டென்சில் மார்க்கிங்) அமைத்துக் கொண்டு எழுதுவது, ஆசிரியர்கள் தொடர்ந்து ஒரே அளவில் எழுத உதவியாக இருக்கும். கண் சார்ந்த பிரச்னைகள் எதுவாக இருந்தாலும் பாதிப்பு உள்ள குழந்தைகளை வகுப்பில் முதல் வரிசையில் அமர வைக்க வேண்டும். வகுப்பறையில் எப்போதும் ஒரே சீரான வெளிச்சம் இருக்க வேண்டும். மேலும் கரும்பலகை ஒளியை பிரதிபலிப்பதாகவும், பார்க்க சிரமமூட்டுவதாகவும் இருக்க கூடாது. இவ்வாறு சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருமண வாழ்த்து...



உணர்வினை மதித்து
உரிமைக்கு இடமளித்து
ஐயந்தெளிந்து அன்போடு வாழ்க!
அகிலம் போற்ற இனிதாய் வாழ்ந்திடுக!

மனம்போல மாங்கல்யம்
மன்றத்தில் வாழ்த்துக்கள்!
மழைபோல் பொழிய
மலர்மாலை சூடி மகிழ்வோடு வாழ்க!

மாங்கல்ய பந்தம்
மாலையிட்ட உறவு
மகத்தானது - அது
மகிழ்வோடு துணையானது!

அழகான வாழ்க்கை!
அன்பான உலகம்!
அறிவோடும் அன்போடும்
ஆண்டாண்டு வாழ்ந்திடுக!

மணமக்கள் :

**P. ஜெகதீசன் - A. ஆஷா**

மணநாள்

**05-04-2018 வியாழன்**

இடம்:
தேவபாண்டலம்
**அருள்மிகு சிவன் கோவில்**
சங்கராபுரம் வட்டம்,

அன்புடன்

**K. அண்ணாமலை**
**A. குப்பம்மாள்**
எறையூர்.

**K. பெரியசாமி**
**P. பாலம்மாள்**
பாவளம்.

# பா.ஜ.க. ஆட்சியில் இந்திய பொருளாதாரம் சீர்குலைவு

## ராகுல்காந்தி குற்றச்சாட்டு



கர்நாடகத்தில் தேர்தல் பிரசார சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் ராகுல்காந்தி, மைசூருவில் உள்ள மகாராணி கல்லூரியில் மாணவிகளிடம் உரையாடல் நிகழ்த்தினார்.

பணமதிப்பிழப்பு நடவடிக்கை, ஜி.எஸ்.டி., இந்திய பொருளாதாரம் உள்ளிட்ட மாணவி களின் கேள்விக்கு அவர் பதில் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

நாடு முழுவதும் பணமதிப்பிழப்பு நடவடிக்கை மேற்கொண்டது தவறான செயல். அவ்வாறு செய்திருக்கக்கூடாது. பணமதிப்பிழப்பு மற்றும் ஜி.எஸ்.டி. இவை இரண்டும் இந்திய பொருளாதாரத்தை சீர்குலைத்துவிட்டது. ரிசர்வ் வங்கி ஆளுநர், தலைமை பொருளாதார ஆலோசகர், நிதி அமைச்சர் இவர்கள் யாரும் பணமதிப்பிழப்பால் சிக்கல் இருப்பதை அறிந்திருக்கவில்லை. இந்த நடவடிக்கை பைத்தியகாரத்தனமானது என்று முன்னாள் நிதியமைச்சர் கூறினார்.

முன்னறிவிப்பின்றி பணமதிப்பிழப்பு சட்டம் கொண்டு வந்ததால் ஏழை, நடுத்தர மக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளானார்கள். கறுப்பு பணத்தை 1.1 சதவீதம் மட்டுமே மீட்டுள்ளனர். மீதி பணத்தை பா.ஜ. அரசால் மீட்க முடியவில்லை. விவசாயி கடன் வாங்கினால் அந்த கடனை திருப்பி செலுத்த பல வகைகளில் நெருக்கடி தருகின்றனர். ஆனால் விஜய் மல்லையா, லலித்மோடி, நீரவ் மோடி போன்றோர்களை தப்பிக்க விடுகின்றனர்.

ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு தருவதாக மோடி வாக்குறுதி அளித்திருந்தார். அப்படி கணக்கெடுத்தால் 4 ஆண்டுகளில் பிரதமர் மோடி 8 கோடி பேருக்கு வேலை கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர் அதனை செய்யவில்லை. வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றால் தொழிற்சாலைகள் தொடங்கியிருக்க வேண்டும். தொலைநோக்குத் திட்டமின்றி செயல்பட்டால் எப்படி வேலை வாய்ப்பு அளிக்க முடியும் ?

நாட்டின் பண்பாடு, கலாச்சாரம் அரசாங்கத்தின் கையில் இல்லை. இவற்றை பாதுகாக்க மக்கள் தான் முயற்சி எடுக்க வேண்டும். நாகரீகம் மாற மாற நாம் நம் கலாச்சாரம், பண்பாட்டை மறந்துவிடக்கூடாது என்று ராகுல் கூறினார்.

- சந்தோஷ்சிவன்




# விபத்து இழப்பீட்டில் போக்குவரத்துக் கழகங்கள் மோசடி!

அரசு பஸ்களில் பயணிகளிடம் வசூலிக்கப்படும் விபத்து இழப்பீடு தொகையை கண்காணிக்க இன்னும் கமிட்டி அமைக்காததால் அந்த தொகை பாதுகாப்பாக இருக்கிறதா என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமிழகத்தில் ஆண்டுக்கு சராசரியாக 15,000 சாலை விபத்துக்கள் நடக்கின்றன. இதில் அரசு பஸ்களால் மட்டும் சுமார் 1000 விபத்துக்கள் நடக்கிறது. இதனால் ஆண்டுக்கு சராசரியாக 1,200 பேர் உயிரிழக்கின்றனர். அரசு பஸ்களால் விபத்து ஏற்பட்டு உயிரிழந்தால் சம்பந்தப்பட்டவரின் குடும்பத்துக்கு போக்குவரத்துக் கழகங்கள் இழப்பீடு வழங்க வேண்டும்.

அதன்படி, உயிரிழப்புக்கு அதிகபட்சம் நபர் ஒருவருக்கு 2.5 லட்சமும், காயத்துக்கு அதிகபட்சம் 1 லட்சமும் விபத்து இழப்பீடு வழங்கப்படும். இந்த வகையில் மட்டும் அரசு போக்குவரத்துக்கழகங்களுக்கு ஆண்டுக்கு 100 கோடிக்கு மேல் செலவாகிறது. அதேபோல் சுங்க கட்டணமாக ஆண்டுக்கு 12 கோடி செலுத்துகின்றனர்.

ஏற்கனவே கடும் நிதிநெருக்கடி உள்ளதால், இழப்பீடு செலவை சமாளிக்க முடியாமல் போக்குவரத்துக் கழகங்கள் திணறி வந்தன. இந்த நிலையில், கடந்த ஜனவரி மாதம் தமிழகத்தில் அரசு பஸ் கட்டணம் உயர்த்தியபோது விபத்து இழப்பீடு தொகை மற்றும் சுங்க கட்டணத்தை பயணிகளிடமே வசூலிக்கப்படும் என்று அறிவித்தனர்.

அதன்படி, நகர் பகுதிகளில் டிக்கெட் ஒன்றிற்கு 1ம், புறநகர் பகுதிகளில் டிக்கெட் விலைக்கேற்ப குறைந்தபட்சம் 1 முதல் அதிகபட்சம் 10 வரை விபத்து இழப்பீடு, சுங்க கட்டண தொகை பயணிகளிடம் வசூலிக்கப்படுகிறது. டிக்கெட் விலை உயர்வையே ஏற்றுக்கொள்ள முடியாத மக்கள், இழப்பீட்டு தொகையையும் தங்கள் தலையில் சுமத்தியாதல் அரசு மீது கொந்தளிப்பில் உள்ளனர்.

பயணிகளிடம் வசூலிக்கப்படும் இழப்பீட்டு தொகையை நிர்வகிக்க தனியாக ஒருங்கிணைந்த நிதியம்(கமிட்டி) உருவாக்கப்படும் என்று அரசு அறிவித்தது. நாள் ஒன்றுக்கு தமிழகம் முழுவதும் சராசரியாக 1.80 கோடி பேர் பயணிக்கின்றனர். ஒரு நபரிடம் 1 வசூலித்தாலே தினமும் 1.80 கோடி விபத்து இழப்பீடு கிடைக்கும். புறநகரில் டிக்கெட் விலைக்கேற்ப இழப்பீட்டு கட்டணம் உயர்வதால் அந்த வகையில் கூடுதலாக தினமும் சுமார் 2.50 கோடி கிடைக்கிறது.

எனவே மாதம் ரூ. 99 கோடி என இதுவரை சுமார் 200 கோடி விபத்து இழப்பீட்டு மற்றும் சுங்க கட்டண தொகை வசூலாகியிருக்க வேண்டும். இந்த நிலையில், 2 மாதங்கள் தாண்டியும் விபத்து இழப்பீடு தொகை தொடர்பாக இன்னும் கமிட்டி அமைக்கப்படவில்லை. இதனால் தினசரி கலெக்‌ஷனில் கிடைக்கும் விபத்து இழப்பீட்டு தொகை எந்த நிதியில் வரவு வைக்கப்படுகிறது என்று சமூக ஆர்வலர்களிடையே கேள்வி எழுந்துள்ளது.

அரசு பஸ் எதாவது விபத்தில் சிக்கும்போது அதில் இருக்கும் பயணிகள் உயிரிழக்க நேரிட்டால் அவர்களுக்கு போக்குவரத்துக் கழகம் இழப்பீடு வழங்கும். அதேபோல், பஸ் விபத்தால் பிற வாகனங்களுக்கு ஏதாவது சேதம் ஏற்பட்டாலும் அந்த வாகனம் மற்றும் உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும். ஆனால் தற்போது பயணிகளிடம் இழப்பீடு வசூலிக்கப்படுவதால், வெளியே நடக்கும் விபத்துக்கு நாங்கள் ஏன் இழப்பீடு தர வேண்டும் என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதுகுறித்து போக்குவரத்துக் கழக அதிகாரி ஒருவர் கூறியதாவது:

அண்டை மாநிலங்களான கர்நாடகா, கேரளாவிலும் இழப்பீட்டு தொகை பயணி களிடம் தான் வசூலிக்கப்படுகிறது. இதற்காக அங்கு டாக்டர்கள், வக்கீல்கள் அடங்கிய குழு உள்ளது. எனவே தமிழகத்திலும் அதுபோன்று குழு அமைப்பதற்கான பணிகள் நடந்து வருகிறது. முதல்கட்டமாக அரசாணை வெளியிடப்படும். இதற்கான ஆவணங்கள் தயாராகி வருகிறது.

அரசு ஒப்புதல் கிடைத்தவுடன் அரசாணை வெளியாகும். தற்போது தினசரி கலெக்‌ஷனில் விபத்து இழப்பீடு கட்டணம் மட்டும் தனியாக பிரிக்கப்பட்டு வங்கியில் வரவு வைக்கப்படுகிறது என்றார்.

ஏற்கனவே ஊழியர்களிடம் பிடித்தம் செய்யப்படும் பிஎப் உள்ளிட்ட பணபலன்களை போக்குவரத்துக் கழகங்களை முறையாக வரவு வைக்காமல் நிர்வாக செலவுக்கு எடுத்துக் கொண்டது. அந்த வகையில் சுமார் ரூ.5000 கோடிக்கு மேல் நிர்வாகம் பிடித்தம் செய்துள் ளது. இதை கண்டித்து தான் பஸ் ஊழியர்கள் போராடி வருகின்றனர்.

இந்த சூழ்நிலையில் விபத்து இழப்பீடு தொகையும் மர்மமான முறையில் வங்கியில் வரவு வைக்கப்படுவதால் அந்த தொகையை யும் அதிகாரிகள் நிர்வாக செலவுக்கு எடுத்து விடுவார்களோ என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

**- சரவணன்**


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்**
**துடிப்பான, உண்மையை வெளிக்கொணர**
**சேவை மனப்பான்மையுடன்**
**பணியாற்ற மாவட்ட வாரியாக**

**ஆண்/பெண் நிருபர்கள் தேவை**

தொடர்புக்கு

**மக்கள் விசாரணை * அருணை முரசு**

**Cell : 93821 33334 / 63819 50149**

**Email : writermouriyan@gmail.com**

முனைவர் ஆ.மவுரியன்



வீரத் தமிழச்சிகளின் வரலாறு..!

6

# உலகின் முதல் தற்கொலைப் போராளி தமிழச்சி "குயிலி"



**ஆங்கிலத் தளபதி பாஞ்சோர் என்ன நடக்கிறது என்பதை அறிய முடியாமல் விழி பிதுங்கி நின்றான்.**

ஆனால் இந்தப் போர் இதுவரை நடந்த தாக்குதல்களிலிருந்து மாறுபட்டிருந்தது. ஆங்கிலேயரின் நவீன ஆயுதங்களுக்கு முன்பு வேலுநாச்சியாரின் படை தாக்குப் பிடிக்க முடியவில்லை. தமிழர் பக்கம் அழிவு அதிகமாகிக் கொண்டிருந்தது.

போர்முரசு கொட்டட்டும் என ஆணையிட்டுச் சென்றார் வேலுநாச்சியார். வேலுநாச்சியாரும் சாதாரண பெண்போல மாறுவேடத்தில் கோயிலுக்குள் புகுந்தார். அவரது கண்கள் கோட்டையின் ஒவ்வொரு பகுதியையும் அலச ஆரம்பித்தது. ஆயுதங்கள் அனைத்தையும் கோட்டையின் நிலா முற்றத்தில் குவித்து வைத்திருந்தனர் ஆங்கிலேயர்கள்.

ஒரு சில வீரர்களின் கையில் மட்டுமே ஆயுதங்கள் இருந்தன. வேலுநாச்சியார் கோட்டையை அளவெடுத்தது போலவே குயிலியின் கண்களும் அளவெடுத்தன. நிலா முற்றத்தில் குவிக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் கண்டதும், அவளது மனதில் ஒரு மின்னல் யோசனை தோன்றியது. ஆனால், அந்த யோசனையை வெளியே சொன்னால் செயல்படுத்த அனுமதி கிடைக்காது என்பதை அறிந்திருந்த குயிலி, மெதுவாக ராணி வேலுநாச்சியாரைப் பிரிந்து கூட்டத்தோடு கலந்துகொண்டாள். கோட்டையில் பூஜை முடிந்து அனைவரும் கோட்டையை விட்டு வெளியேற ஆரம்பித்தபோது, பெண்கள் கூட்டமும் மெதுவாக கலையத் தொடங்கியது.

வேலுநாச்சியார் தனது போரைத் தொடங்க இதுவே தருணம் என உணர்ந்து, கையைத் தலைக்குமேல் உயர்த்தி, "வீரவேல், வெற்றிவேல்!" என்று விண்ணதிர முழங்கினார். பெண்கள் படை புயலாய்ச் சீறியது. வழிபடக் கொண்டுசென்ற மாலைக்குள் இருந்து திடீரென பெண்களின் கைகளில் வாளும் வேலும் தோன்றின. ஆயுதங்களைச் சுழற்றி, வெள்ளையர்களை வெட்டிச்சாய்த்தனர்.

"சார்ஜ்!" என்று கத்தியபடியே, பான்சோர் தன் இடுப்பில் இருந்த இரண்டு கைத்துப்பாக்கிகளை எடுத்து சரமாரியாகச் சுட்டான். வெள்ளைச் சிப்பாய்கள் ஆயுதக் குவியலை நோக்கி ஓடினர். தோல்வி தவிர்க்க முடியாதது என்கிற நிலை வேலுநாச்சியாருக்கு ஏற்பட்டது.

என்ன செய்வதென சிந்திக்கக் கூட முடியாத சூழலில், வேலு நாச்சியார் பான்சோரைப் பிடிக்க மேல்மாடத்துக்குச் செல்வதற்குள் அங்கிருந்த யாரோ ஒரு பெண், தனது உடல் முழுக்க கொளுந்துவிட்டு எரியும் தீயோடு, "வீரவேல், வெற்றிவேல்" என்று கத்தியபடியே ஆயுதக் கிடங்கில் குதித்தாள்.

ஆயுதங்கள் அனைத்தும் தீ பிடித்து வெடித்துச் சிதறின. கை வேறு, கால்வேறு, தலை வேறு, உடல் வேறு, என அவ்வுருவம் சுக்கு நூறாகிப் போனது. ஆயுதக் கிட்டங்கியின் அழிப்பு வேலு நாச்சியாரின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்தது. ஆயிரக் கணக்கானோர் மண்ணில் மடிந்தார்கள்.

தப்பி ஓட முயன்ற பான்சோரை, வேலு நாச்சியாரின் வீரவாள் வளைத்துப் பிடித்தது. வெற்றி முழக்கம் எங்கும் ஒலித்தது. வேலு நாச்சியார் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

வெற்றியைக் கொண்டாடத் தன் தளபதிகளெல்லாம் நெருங்கிக் கொண்டிருந்த பொழுது குயிலியைத் தேடினார் வேலுநாச்சியார். வேலுநாச்சியாரின் கண்களோ தன் உயிரான தோழி, குயிலியைத் தேடின. குயிலி கண்டறிய முடியாத அளவிற்கு உருத்தெரியாமல் மண்ணோடு மண்ணாகிப் போயிருந்தார்.

ஆம் ஆயுதக் கிட்டங்கியில் குதித்தது வேறு யாருமில்லை, குயிலியே. போர் தொடங்கிய போது குயிலின் எண்ணம் ஆயுதக் கிடங்கின் மேல் நின்றது. "நமது விடுதலைக்கான இறுதிப் போர் இது. இதில் நாம் தோல்வி அடைந்தால், இனி எத்தனை ஜென்மம் எடுத்தாலும் வெற்றி பெற முடியாது. நான் வெற்றிக்கு வழிகாட்ட ஒளியூட்டப் போகிறேன்' என்று கூறியபடியே நாட்டின் விடுதலைப் போரில் தன்னை ஈந்தவர் குயிலிதான். உலகிலேயே முதன் முதலில் தற்கொலைத் தாக்குதலை நடத்திய பெருமையைச் சூடிக்கொண்டாள்.

மறவர் சீமையின் விடுதலைக்காக குயிலி தன்னையே பலி கொடுத்தாள் என்பதை அறிந்ததும், அந்தத் தியாக மறத்திக்காக வேலுநாச்சியாரின் வீர விழிகள் கரைந்தன. குயிலி போன்ற தியாகிகளின் ஒட்டுமொத்த சக்திதான் இந்தியாவுக்கு விடுதலை வழிகாண வைத்தது.

சிவகங்கை மண்ணை அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விரட்டிட வீரமங்கை வேலு நாச்சியார் சபதம் நிறைவேற்றிடத் தன்னையே ஈந்து தற்கொலைப் போராளியாய் அழிந்து போன குயிலியின் வீரம் இந்தத் தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும் தங்கள் உடலையே எரி பொருளாக்கிய எத்தனையோ குயிலிகள் இன்னும் சரித்திரம் ஏறாமலேயே சருகாய்ப் போனார்கள். குயிலியின் தியாகத்துக்குத் தலைவணங்குவோம்!

- தொடரும்

## வங்கிகளின் மீதுள்ள நம்பிக்கை குறையும்!

வங்கிக் கடனைத் திரும்பச் செலுத்தாமல் வெளிநாடு சென்றவர்களின் சொத்துக்களைப் பறிமுதல்செய்ய மத்திய அரசு மசோதா ஒன்றினைத் தயார் செய்துள்ளது. கடனைத் திரும்பச் செலுத்தாமல் வெளிநாடு சென்றவர்கள், இங்கேயே இருப்பவர்கள் அனைவரது சொத்துக்களையும் பறிமுதல் செய்ய விரைவில் சட்டம் இயற்றப்பட்டு, உறுதியாக, பாரபட்சமின்றி அச்சட்டம் அமல்படுத்தப்பட வேண்டும். இல்லையென்றால், மக்களுக்கு வங்கிகளின் மீதுள்ள நம்பிக்கை குறைந்து பொருளாதாரச் சீரழிவுக்கு வழிவகுக்கும்.

## அரசின் 'இணையா'தளம்

தமிழக அரசு 'தமிழ்நாடு மக்கள் இணைய தளம்' tnurbanepay.tn.gov.in என்ற இணைய தளத்தில் அனைத்து நகராட்சிகளின் சேவைகள் ஒருங்கிணைக்கப்பட்டு, சொத்து வரி போன்றவற்றை எங்கிருந்து வேண்டுமானாலும் இணைய வழி செலுத்தலாம் என்ற செய்தியைப் படித்தேன்.

தகவல்களைத் தெரிவித்து, பொள்ளாச்சி நகராட்சியிலுள்ள என் சொத்து விவரங்களைத் தேடினால் 'ஒரு விவரமும் இல்லை' என்றே பதில் வருகிறது. குறைகளைச் சுட்டிக்காட்டிப் பின்னூட்டம் எழுதியதற்கும் பதில் இல்லை. எனவே, இருக்கின்ற இணைய சேவைகளை மேம்படுத்தி, அவற்றை முறையான பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தாலே போதும்.



# டிஎஸ்பி முதல் டிஜிபி வரை உள்ள அதிகாரிகளின் வீடுகளில் வேலை பார்க்கும் 5 ஆயிரம் போலீசார்

தமிழகத்தில் 5 ஆயிரம் போலீசார், அதிகாரிகளின் வீடுகளில், ஆர்டர்லியாக வேலை பார்க்கின்றனர். இவர்களை பற்றிய வீடியோ ஆதாரத்தை வெளியிடப் போவதாக போலீசார் சார்பில் தமிழக உள்துறை செயலாளருக்கு புகார் அனுப் பப்பட்டுள்ளது.

தமிழக போலீசில், ஐந்து டி.ஜி.பி.,க்கள், 24 ஏ.டி.ஜி.பி.,க்கள், 39 ஐ.ஜி.,க்கள், 18 டி.ஐ.ஜி.,க்கள், 122 எஸ்.பி.,க்கள், 16 பட்டாலி யன் கமாண்டன்ட்கள், 105 ஏ.டி.எஸ்.பி.,க்கள் உட்பட, ஒரு லட்சம் போலீசார் பணியாற்று கின்றனர்.

பல ஆண்டுகளாக, காவலர்கள் முதல் டி.ஜி.பி., வரை, 20 ஆயிரம் போலீஸ் பணியிடங்கள், நிரப்பப்படாமல் காலியாகவே உள்ளன. இந்நிலையில், 5 ஆயிரம் போலீசார் அன்றாட பணிகள் எதையும் செய்யாமல், போலீஸ் அதிகாரிகளின் வீடுகளில் ஆர்டர்லி வேலை பார்க்கின்றனர். அவர்களை மீட்டு, உடனடியாக போலீஸ் பணிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என, தமிழ்நாடு சிறப்புக் காவல்படை மற்றும் ஆயுதப் படை காவலர்கள் நலக்குழு சார்பில், தமிழக உள் துறைக்கு மனு அனுப்பப்பட்டுள்ளது.

மனுவில் கூறியிருப்பதாவது: டி.எஸ்.பி. முதல் டி.ஜி.பி., வரை, பல்வேறு பதவி நிலைகளில் பணியாற்றும் போலீஸ் அதிகாரிகள், கிரேடு - 2 கான்ஸ்டபிள் முதல், எஸ்.ஐ., வரை யிலான போலீசாரை, சட்டவிரோதமாக, ஆர்டர்லி வேலைக்காக, தம் வீடுகளில் வைத்துள்ளனர்.

அதிகாரிகளின் மனைவியரை, கடைவீதி, மார்க்கெட், வழிபாட்டு தலங்கள், கிளப், சொந்த நிகழ்ச்சிகளுக்கு போலீஸ் வாகனத்தில் அழைத்து செல்வது, காய்கறி, மளிகை வாங்கி வருவது, வாரிசுகளை பள்ளி மற்றும் கல்லூரி களுக்கு அழைத்து செல்வது, சமையல், தோட்ட பராமரிப்பு என, எண்ணற்ற வேலைகளை செய்து வருகின்றனர். இவர்கள், பயணப்படியை தவறாமல் பெற்றுக் கொள்கின்றனர். பதவி உயர்வுகளையும் குறிப்பிட்ட கால கட்டங்களில், தவறாமல் பெற்று விடுகின்றனர். விடுமுறையும், ஓய்வும் அவ்வப்போது கிடைத்து விடுகிறது. இவ்வகை போலீசாருக்கு ஊதியம் வழங்குவதால், தமிழக அரசுக்கு, ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது.

ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணியாற்றும் போலீசார், தினமும், 12 முதல், 18 மணி நேரம் வரை ஓய்வின்றி பணி யாற்றி, அடிமை போல நடத்தப்படுகின்றனர்.

இதனால், குடும்பத்தில் பிரச்னை ஏற்பட்டு, ஆண், பெண் போலீசார் தற்கொலை செய்யும் சம்பவங்களும் நடக்கின்றன.

எனவே ஆர்டர்லி போலீசாரை உடனடி யாக பணிக்கு திரும்ப அழைத்து, சட்டப்படி ஒதுக்கப்பட்ட பணியாளர்களை மட்டும் அதிகாரிகளின் முகாம் அலுவலகங்களில் பணி யாற்ற உத்தரவிட வேண்டும். இல்லாவிடில், அதிகாரிகளின் வீடுகளில் வேலை பார்க்கும் போலீசாரின் அவல நிலையை வீடியோவில் பதிவு செய்து, சமூக ஊடகங்களில் வெளியிடு வதைத் தவிர வேறு வழியில்லை. இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்தக் கடிதம் போலீஸ் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**- அகிலாண்டேஸ்வரி**

# ஒருநாள் விடியும்

ஒரு மன்னன் தன் மக்களிடம் ‘அமைதி’ ன்னா என்ன? அப்படிங்கறத தத்ரூபமான ஓவியமா வரைந்து கொடுப்பர்களுக்கு மிகச் சிறந்த பரிசு வழங்கப்படும்னு அறிவிச்சாரு.

இதையடுத்து நாட்டின் முன்னணி ஓவியர்கள் அமைதியை பிரதி பலிக்கும் வண்ணம் தத்ரூபமான பல ஓவியங்களை வரைந்து அரண்மனைக்கு எடுத்து வந்தாங்க.!

மன்னன் ஒவ்வொரு ஓவியமா பார்வை இட்டுக்கொண்டே வந்தான். ஒவ்வொரு ஓவிய ரும் ஒரு மாதிரி பிரதி பலித்து இருந்தாங்க.!!

ஒருத்தர் அழகான ஏரியை ஒரு அழகிய மலையின் அடிவாரத்தில் இருக்கற மாதிரி வரைஞ்சு இருந்தாரு. மலையின் பிம்பம் ஏரியில் பிரதி பலித்து பார்க்கவே ரம்மியமா இருந்தது.!!

மற்றொருத்தர் பார்த்த உடனே பறிக்கத் தூண்டும் வகையில் மலர்களை தத்ரூபமாக வரைஞ்சிருந்தாரு.

இப்படி ஒவ்வொருவரும் அமைதியை தங்களுக்கு தோன்றினபடி ஓவியத்தில் பிரதி பலிச்சிருந்தாங்க.! ஆனா, ஒரே ஒரு ஓவியத்தில் ஒரு மலை மேலிருந்து ஆக்ரோஷமா கொட்டும் நீர்வீழ்ச்சியின் படம் வரையப்பட்டிருந்துச்சு.

அதுமட்டுமா இடியோட மழை வேற கொட்டிக் கொண்டு இருந்தது.. சற்று உற்று பார்த்தப்ப நீர்வீழ்ச்சியின் கீழே இருந்த மரம் ஒன்றில் கூடு கட்டியிருந்த பறவை ஒன்று கூட்டில் தனது குஞ்சுகளோட காணப்பட்டது.!!

“இந்த ஓவியத்தை வரைந்தது யார்?”

சம்பந்தப்பட்ட ஓவியர் எதிரே நிறுத்தப் பட்டாரு.!

மன்னர்., ”இந்த ஓவியம் தத்ரூபமாக பார்க்க அழகாக இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. ஆக்ரோஷத்துடன் கொட்டும் அருவி, இடியுடன் கூடிய மழை. கீழே மரத்தில் தனது கூட்டில் ஒரு பறவை. ஆனால் இதில் அமைதி எங்கே இருக்கிறது?” என்றார்..

அதுக்கு ஓவியர்,

”மன்னா சப்தமும், பிரச்சனையும், போராட்டமும் இல்லாத இடத்தில் இருப்பது அமைதி அல்ல!

இவை எல்லாம் இருக்கும் இடத்தின் நடுவே இருந்து கொண்டு, எதற்கும் கலங்காமல் எதுவும் தன்னை பாதிக்க விடாமல் பார்த்துக் கொண்டு உள்ளுக்குள் அமைதியாக இருப்பதே உண்மையான அமைதி.!

அப்படி பார்க்கும்போது குஞ்சுகளுடன் இருக்கும் இந்த பறவையே பரிபூரணமான அமைதியில் இருக்கிறது.!”

“அருமை .. அமைதிக்கு ஒரு அற்புதமான விளக்கம்” னு கைதட்டிய மன்னன் அந்த ஓவியத்திற்கே முதல் பரிசு கொடுத்தான்!!.

ஆம் நண்பர்களே.,

அனைத்து வசதிகளும் அமையப்பெற்று எந்த வித பிரச்சனையும் இல்லாத ஒரு சூழலில் அமைதியை தேடி ஆள் நடமாட்டம் இல்லாத இடங்களுக்கு செல்வதோ, இமயமலைக்கு செல்வதோ, கோயில் கோயிலோக்கோ ஓடுவது அமைதியல்ல. அப்படி வாழ்வதும் ஒரு வாழ்க்கையும் அல்ல.

ஆயிரம் துன்பத்திற்கு நடுவே, நிச்சயம் ஒருநாள் விடியும் ” என்று விடா முயற்சியோடு,

தினசரி உழைச்சிட்டிருக்காங்களே அவர்களிடம் இருப்பது தான் அமைதி.



# பாட்டில் குடிநீர் அபாயம்!

பாட்டிலில் அடைக்கப்பட்ட குடிநீர் சுகாதாரமானது என்று நம்பி, விலை கொடுத்து வாங்கி அருந்தும் தண்ணீரில், 'கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய அளவு பிளாஸ்டிக்குகள் மிதக்கின்றன' என்று சமீபத்திய ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. சபையின் சுற்றுச்சூழல் திட்டப் பிரிவின் மதிப்பீட்டின்படி, எல்லா நாடுகளிலும் ஆண்டுக்கு 3,000 லட்சம் டன் பிளாஸ்டிக் உற்பத்தியாகிறது. இந்த பிளாஸ்டிக்கைக் கையாள்வதில் அக்கறையும் திறனும் எந்த அரசுக்கும் இல்லை என்பதுதான் கவலைதரும் விஷயம்!

மைக்ரோ-பிளாஸ்டிக்ஸ் என்பது 5 மில்லி மீட்ட ருக்கும் குறைந்த அளவுள்ள நுண்ணிய பிளாஸ்டிக் ஆகும். இது தொழிலகங்களில் உற்பத்தியாகிறது.

தரையைச் சுத்தம்செய்யும் 'ஸ்கிரப்ப'ர் களி லும் அழகு சாதனங்களிலும் பயன்படுத் தப்படு கிறது. நுகர்வோர் பயன்படுத்திவிட்டு வீசி எறியும் பிளாஸ்டிக்குகள் உடைந்தும் சிதைந்தும் நிலத்திலும் நீரிலும் காற்றிலும் கலந்து விடுகின்றன, ஆனால் அழிவதில்லை. கழிவுநீரில் இத்து கள்கள் அடித்துச்செல்லப்படுகின்றன. துணிகளைத் துவைக்கும்போது நுண்ணிய நாரிழையாக பிளாஸ்டிக் துகள்கள் பிரிந்து நீர்நிலை களிலும் கடலிலும் கலக்கின்றன.

குடிநீரில் உள்ள பாலிபுரோபிலின், பாலி எத்திலின் டெரப்தலேட் மற்றும் இதர ரசாயனங் கள் உணவு, சுவாசிக்கும் காற்று ஆகியவற்றில் கலப்பதால் உடலில் நஞ்சு சேர்கிறது. இவை உடலின் நோய்த்தடுப்பு ஆற்றலைக் குறைக் கலாம் அல்லது முழுதாக இழக்க வைக் கலாம். உலக அளவில் ஒரே சமயத்தில் ஒருங்கிணைந்த ஆய்வுகளை மேற் கொண்டு இதன் விளைவுகளை மேலும் அறிய வேண்டும். தண்ணீரில் கலந்துவிட்ட பிளாஸ்டிக்கால் ஏற்படும் தீய விளைவுகளை ஆராய உலக சுகா தார நிறுவனம் முன் வந்திருப்பது நிம்மதியளிக் கிறது. கடல் சூழலில் பிளாஸ்டிக்கைக் கலப்பைத் தடுப்பது தொடர்பாக அனைத்து நாடுகளும் ஏற்கக்கூடிய ஒப்பந்த வரைவு வாசகங்களுடன் 18 மாதங்களில் வருவதாக ஐநா சபையின் உறுப்பு நாடுகள் கடந்த டிசம்பரில் நைரோபி யில் உறுதியேற்றன. ஒவ்வோராண்டும் 80 லட்சம் டன் பிளாஸ்டிக் குப்பைகள் கடலில் சேர்கின்றன.

பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் காகித உறைகள் இவற்றில் அதிகம். ஒரு முறை பயன் படுத்தி விட்டுத் தூக்கிவீசி எறியப்படும் மைக்கா என்று அழைக்கப்படும் பிளாஸ்டிக்குகளால் இந்தியாவில் பிரச்சினை பெரிதாகிக் கொண்டி ருக்கிறது.

2016-ல் இயற்றப்பட்ட திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை எல்லா ஊர்களிலும் கடைப்பிடிப்பதைக் கட்டாயமாக்க வேண்டும். நகரக் குப்பைகளிலிருந்து பிளாஸ்டிக்கையும் இதர திடப்பொருட்களையும் பிரிப்பதன் மூலம், சுற்றுச்சூழலில் பிளாஸ்டிக் கழிவு சேரு வதைக் கணிசமாகத் தடுத்துவிடலாம். உள் ளாட்சி அமைப்புகளும் மக்களும் இணைந்து திடக்கழிவுகளையும் பிளாஸ்டிக் கழிவுகளையும் எளிதில் பிரித்துவிடலாம். பிளாஸ்டிக் தயாரிப் பிலேயே மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். விலை மலிவான, பயன்படுத்திய பிறகு தூக்கி எறியும் பிளாஸ்டிக்குகளின் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும். மீண்டும் பயன்படுத்தக் கூடிய, முழுதாக மறுசுழற்சி செய்யவல்ல பிளாஸ்டிக்குகளைத் தயாரிக்க வேண்டும்.

**- N. குப்புசாமி**



# தொழிலாளர்களின்
## எந்த வேலையும் நிரந்தரம் இல்லை

எல்லா தொழில் துறைகளிலும் ஒப்பந்த தொழிலாளர்களை நியமிக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ள நிலையில் எந்த வேலையும் நிரந்தரம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

வேலை தேடுவோருக்கு எந்த வேலையும் இனி நிரந்தரம் இல்லை, ஒப்பந்த பணி, குறிப்பிட்ட காலகட்டத்திற்கான பணி ஆகியன எல்லா துறைகளிலும் மேற்கொள்ள மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் தற்காலிக பணியாளர்களை 2 வாரம் முன்னதாக நோட்டீஸ் கொடுத்து அவர்களை பணியில் இருந்து நீக்கம் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான உத்தரவுகளை மத்திய தொழில் துறை பிறப்பித்துள்ளது. நிரந்தர வேலை வழங்க வேண்டிய நடைமுறைகளை தவிர்த்து பெரு முதலாளிகளுக்கு உதவும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதே வேளையில் தற்போதுள்ள நிரந்தர தொழிலாளர்களை புதிய உத்தரவின் அடிப்படையில் குறிப்பிட்ட காலம் மட்டும் பணி செய்யும் ஒப்பந்த தொழிலாளியாக மாற்ற தொழில் நிறுவனங்களுக்கும், அதன் முதலாளிகளுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. இது தொடர்பாகவும் உத்தரவில் தனியே குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவு பாதுகாப்பு, ஆடை உற்பத்தி சார்ந்த துறைகளில் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்த ஒப்பந்த அடிப்படையிலான வேலைவாய்ப்பு இனி எல்லா தொழில், வணிக துறைகளிலும் செயல்பாட்டிற்கு வரும்.

மத்திய தொழில்துறை அமைச்சகம் இந்த உத்தரவை வெளியிட்டுள்ளது. 1946ம் ஆண்டுள்ள தொழில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டு புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளிலும், தொழில் நிறுவனங்களிலும் இனி நிரந்தர நிலையில் உள்ள வேலைக்கு கூட குறிப்பிட்ட கால அளவுக்கு மட்டும் தொழிலாளர்களை நியமிக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக தொழிலாளியும், முதலாளியும் ஒப்பந்த கடிதம் வாயிலாக உறுதி செய்துகொள்ள வேண்டும் என்பது ஆகும்.

வேலை, சம்பளம், சலுகைகள் ஆகியவற்றில் நிரந்தர தொழிலாளியையும், தற்காலிக தொழிலாளியையும் ஒரே அடிப்படையில் பாவிக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படவில்லையெனில் தொடர்ந்து தொழிலாளி பணிபுரியவும், சம்பளம் பெறவும் தகுதி இல்லாதவர் ஆகிவிடுவார். மூன்று மாதங்களுக்கு மேல் பணிபுரிந்திருந்தாலும் தற்காலிக பணியாளர்களை இரண்டு வாரம் முன்னதாக நோட்டீஸ் வழங்கி பணியில் இருந்து விலக்கி விடலாம் என்பதற்கு முதலாளிக்கு அதிகாரம் உண்டு என்பது தொடர்பான விபரங்கள் பாராளுமன்றத்தில் பரிசீலனைக்கு கொண்டு செல்லப்படாமல் உத்தரவு அடிப்படையிலேயே நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது 100 தொழிலாளர்களுக்கு அதிகம் உள்ள நிறுவனங்களில் ஒப்பந்த தொழிலாளர்களை நியமிக்க சட்டம் அனுமதிக்கவில்லை என்றபோதிலும் இனி அதுபோன்ற நிலை ஏதும் இல்லை.

ஆனால் அதனையும் மீறி தகவல் தொழில்நுட்ப துறையில் ஒப்பந்த பணியாளர்கள் நியமனங்கள் நடைபெற்று வந்தது. பெருமுதலாளிகள் கொடுக்கின்ற அழுத்தம் காரணமாக மத்திய அரசு இதுபோன்ற ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளதாக தொழிற்சங்கங்கள் குற்றம்சாட்டி வருகின்ற நிலையில் புதிய வேலை தேடுகின்ற இளைஞர்களையும் இந்த சட்டம் கடுமையாக பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

- R. ஜெயா



# இதுதான் போராட்டம்

நாம் பிறப்பது முதல்
இறப்பது வரை போராட்டம்!
போராட்டத்தில் பிறந்து
போராட்டத்தில்
மடிவதுதான் வாழ்க்கை!

இன்று போராட்டமே
இல்லாத வாழ்க்கையை
மட்டுமே வாழ நினைக்கிறோம்! - இது
எப்போதும் சாத்தியமில்லை!
பிறப்பதற்கே லட்ச்சக்கணக்கான
அணுக்களை வென்ற நம்மை,
வாழ்வதற்கான போராட்டத்தை
வெல்ல முடியாதா என்ன?

வீதியில் நின்று போராடுவதும்
நாட்டுக்காக போராடுவதும்
மட்டும் போராட்டம் அல்ல!

உயிர் வாழ்வதற்கான
போராட்டம் தான்
உண்மையான போராட்டம்!
இது எல்லா உயிரிணங்களுக்கும்
பொருந்தும்!

வாழ்க்கையில் நேர்மையாக
இருக்க முயலுவதும்
ஒரு போராட்டம் தான்!
நேர்மையாக இல்லாமல் இருப்பதும்
ஒரு போராட்டம் தான்!

சில நேரங்களில்
நல்லதுக்காகவும்
கெட்டதுக்காகவும்
உண்மைக்காகவும் -ஏன்
நீதிக்காகவும், மண்ணுக்காகவும்
உரிமைக்காகவும்
போராடவேண்டியுள்ளது!

எத்தனையோ
போராட்டங்கள் இருந்தாலும்
உயிர் வாழ்வதற்கான
போராட்டம் மட்டுமே
மற்ற அனைத்து
போராட்டங்களையும்
வென்று விடுகிறது!

- கவிஞர் நிவேதிதா



கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. **A. MOURIYAN,**

# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்









- ❖ We Create Logos
- ❖ Business Cards
- ❖ ID Cards
- ❖ Magazine
- ❖ Books
- ❖ Graphics Elements

and anything







No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com

**Cell : 93821 33344, 63819 50149**

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

